ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

இதழ் 2 சித்தார்த்தி வருஷம் வைகாசிமாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை [8-6-1979] சுடர் 13

# பிற உயிரும் தன் உயிரும் சிவமென அறிந்தோர் போற்றுவர்.

## பொய்யன் என நம்மைப் பேசும் அறிவுபட்ட பட்டதாரிகளே! அம்மன்களே சுவாமிகளே அரசியல்வாதிகளேஇதனைச் சிந்திப்பீரோ.! திருந்துவீரோ தமிழினம் உய்யும்மார்க்கம் நினைபீரோ?

இவ்வாறு திருநாவுக்கரசர் பெருமான் கீழே தரப்பட்ட தேவாரத்து ஏழாவது பாடலில் மொழிகின்றார். இந்த ஒரு தேவாரத்தை நன்கு சிந்திப்போம் தெளிவோம். தெளிந்த பின்பு நமது நடத்தை செயல் யாவும் எப்படியாக இருக்கவேண்டும். இதை தீர்மானிப்போம்.

நமது பத்திரிகைத் தொண்டில் பலர் குறை காணுகின்றார். ஏன் குறை காணுகின்றார்? அவரிடத்துள்ள குறைகளை நாம் காண்பித்து இப்படியாக இருக்க வேண்டிய நீர் இப்படி நடக்கின்றீர். பட்டங்களை பெற்றுக் கொண்டீர்! ஆனால் அவைக்குகந்த செயல் நெறி உம்மிடத்து இல்லை. இது தவறு என்றால் ஒரு அறிவாளியின் கடமை என்ன? தன்னில் தவறு இருக்கிறதா? தான் கௌரவு முடையேன் என்று உலகம் மதித்திடப் பட்டம் பெற்றுள்ளேன். அப்படி இருப்ப நான் எவ்வாறு உயர்வுடன் நடக்க வேண்டிய நான் மிகக் கீழ்மையான நிலையில் நின்று தொழில் செய்வதை விடத்தான் வேண்டும் எனவே செய்திடுவார்.

இது ஒரு அறிவாளியின் செயல். ஒன்பதாவது திருப்பதிகத்து திருநாவுக்கரசர் இன்னமும் கொஞ்சம் உறுதியாக அறிவு இலங்கும் மனத்தில் இருப்பவனே; அறிவுடன் நடப்பார்க்கன்றி அறியாதார் தமது செயலில் ஒன்று தான் அறியாதானே என்கின்றார். இதனையும் சிந்தித்தால் அறிவாளி எனப் பட்டார் யார்? தான் பிழையாக நடந்து கொண்டு தனது பேச்சு வன்மையை பாட்டு வன்மையை வேடிக்கையை விரும்பும் மக்கள் விம்பினால் அவர்க்கு பல பொய் சொல்லி ஏமாற்றி தம்பக்கமாக நிற்கிறார் எனநம்பி இன்னமும் இன்னமும் பிழைகளைக் கூடுதலாகச் செய்வதோ? இதுதகாதே!

மக்கள் நீளவும் இவ்வுலகில் வேடிக்கையையும்காம இரசத்தையும் விரும்புகின்றவர். ஓர் உதாரணம் சொல்வேன்- இன்று எமது யாழ்ப்பாண நாட்டில் வாழும் 99 சத விகிதமான மக்கள் சினிமாவை விரும்புகின்றனர்.

இந்த சினிமாக்கார மக்களுக்கு சினிமா முறையில் ஏதும் சொன்னால் ஏற்கும்; அல்லாதுருந்தால் ஏற்காது. ஆனால் சினிமா ஒரு சேறு அழுக்குடையது. அல்லல் பெருக்குவது. அதற்குள் மூழ்கும் மக்களைக் கரையேற்றுவதென்றால் சேற்றில் மூழ்காத ஒருவனால் தான் முடியும், அதுவலாது ஒருவன் தானும் சேற்றுள் இறங்கினால் சேற்றில் முழ்கிய மக்களுடன் தானும் மூழ்குவனே!

இதை நான் சொல்லவில்லை. திருநாவுக்கரசர் சொல்கின்றார். இவர் செயலைச் சிவன் விரும்பான் என்றதாக. சினிமா சேற்றுள் நின்றார் முருகன் மேல் பல கீர்த்தனம் பாடினாலும் அது பலன் தராது. இதை உணரவேணடும்.

சினிமாக்காரர் தேவாரம் பாடினால் அது தேவாரப் பதிகத்தை தோஷம் உண்டாக்கும் என்பதை நம் மக்கள் உணரவேண்டும். அதற்காகத் தான் தேவாரம் ஓதுவதை சிறந்த ஒரு செயலாக நம் முன்னோர் எண்ணி அதனை ஓதிடும் மக்களை கௌரவமாக ஓதுவார் என்று அழைத்து மதித்தனர். இன்று ஓதுவார் தம்மிடத்துள்ள நல் நிலையை வளர்க்க முடியாமல் குரோதம் பொருள் அவா இறுமாப்பு முதல் பலதீங்கையும் பெற்று மிக மிகக் கீழ்மையான நிலையில் தாம் போவது மன்றி தாம் பேணிய தமிழ் வேதத்தையும் மதிப்பிலாத வகை ஆக்குகின்றனர்.

இதைத் தயவு செய்து நம் மக்கள் உணரவேண்டும். சினிமா எதுவானாலும் ஓர் சேற்றிற்கு ஒப்பாகும். இதை உணராதவன் ஓர் அறிவாளி அன்று. இதனால் திருநாவுக்கரசர் உண்மையை அறிவார்க் கன்றி அறியாதார் தமது செயலில் ஒன்றும்அறியாதானே என்கின்றார்.

சிவன் எல்லா உயிரிலும் இருந்தும் அறிவுடையார் செயல் யாவும் அறிபவன் அதுவல்லார்க்கு அல்லாதவன் இதைப் பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யை என மாணிக்கரும் சொல்கிறார். பொய் என்றால் என்ன மெய் என்றால் என்ன இதனை நம்மக்கள் விளங்கவேண்டுமே?

இன்று திருமுருககிருபானந்த வாரியார் பேச்சு சினிமா. கே. பீ. சுந்தரம்பாள் சினிமா, எம். எஸ் சுப்புலட்சுமி சினிமா. ஆனால் இவரை உலகம் மதித்தாலும் இவரிடம் அறிவாளிக்கு உரிய செயல் இல்லை ஆத்மார்த்த நிலையில் இவர் தவற்றைச் செய்து கொண்டிட இதன் தவற்றை உணராது மக்கள் இவரை ஆன்மீகப் பெரியார் எனவும் ஏற்கிறார். நாம் அதைப் பொருட்படுத்தவில்லை எனினும் உயர்ந்தோரை உலகம் எண்ணாது சிறியோரை மதிக்கும் பொழுது இதன் உண்மையை உணரவைப்பது என் பணியாகியது. சிவதொண்டாகியது. எம்பிரானுடைய உலகில் அவன் காட்டிய அருள் நெறி மங்கி பொருள் நெறியும் இருள் நெறியும் பெருகும்போது உண்மையை எடுத்துக் காட்ட வேண்டியது எமது தூய சிவதொண்டு, எப்படி முற்காலத்து சமண இருள் பரந்து தூய துறவின் நிலையில் வஞ்சனை பெருக்கி மக்கள் மனதில் இருள் பரப்ப முயன்றதோ அதே தன்மையில் சினிமா இன்னும் மோசமான வகையில் மக்களை மனம் திருப்பி சைவநெறியில் பாழும் நிலையை வருவிக்கின்றது. எமது தூய சைவநெறிக்கு சினிமா எட்டுணையேனும் பயனாகாது. இதை அறிவுடையோர் ஏற்பர்.

ஆகவே தான் தீபத்து நாம் அடிக்கடி வலி உறுத்தி வருவது யாதெனின் எம்பெருமானுடைய இருப்பிடங்கள் எம்பெருமான் மீதாக அருள் செய்யப்பட்ட பாடல்கள் இவையாவும் மேன்மையாவன. இவற்றில் கீழ்மையான அறிவிலாத செயலைச் செய்து மக்கள் மதிப்பைப மட்டும் தேடுவதென்றால் அது அறிவிலாதவர் செயலாய இச் செயல் இறைவனுக்கு பிரீதியாகது என்பதை எந்த அறிவாளியும் விளங்க வேண்டும்.

சிவத்தமிழ்வி செல்வி தமது கோவில்களில் உள்ள குறைகளை நாம் வெளிப்படுத்தியது தவறு அவையில் உண்மையில்லை சந்திரதீபத்தை வாசிக்க வேண்டாம் நம்ப வேண்டாம் என துர்க்கை அம்மன் கோவில் வாசலில் பிரசங்கம் செய்தா எனக் கேள்விப் பட்டோம். நமது பத்திரிகைத் தொண்டின் தூய்மையைப் பாவம் ஓர் பெண் தனது பேதமையால் உணர முடியவில்லை. தெல்லிப்பழை துர்க்கை கோயிலில் பிரதிட்டை செய்வாரிடம் காசு வேண்டியது உண்மை. பிரதிட்டை செய்தாரை எழுப்பியது உண்மை, செருப்புக் கழற்றி அடிக்கப் போனது உண்மை. இவை யாவும் சிவத் தமிழுக்குத் தெரியும். ஆனால் அங்கு சில அன்பர் தகாத செயல் கோவிலில் வேண்டாம் என்றார்க்கே கெடு பிடி செய்ய எத்தனங்கள் நடக்கின்றது, துர்க்கை கோவிலை சிவத்தமிழ் தன் சொந்க் கோவில் என நிக்னைகின்றது. அங்கு நீதியை விரும்பும் மக்கள் சிறுபான்மை யாகவும் சிவத்தமிழை விரும்பும் மக்கள் பெரும்பான்மையாக உளர். இப்பு நீதியைநன்நெறியைவிரும்பும் மக்கள் சிறுபாண்மையாகவும்இருப்பதால்நீதியீனம் மூடி மறைக்கப்படுகின்றன துர்க்கை கோவிலில் சிவத்தமிழ் செய்யும் பிரசாரக்தின் போது சந்திரதீபம் உண்மையிலாது பொய் சொல்வது, அப்படி ஒன்றும் நடைபெறவில்லை என தானே பொய் சொல்கின்றது.

இதை காடைத்தனம் கைதட்டி ஆதரிக்கின்றது. பெரியோர்களே இவை நடைபெறவில்லையோ என்று தெல்லிப்பழையில் சென்று விசாரியுங்கள். இதைத்தான் தம்பிரான் சுவாமிகள் நல்லை ஆதீனவித்துவான் செய்கிறார், சில பிரசங்கங்களில் நாம் சொல்வது பொய் தான் அப்படி நடக்கவில்லை தமக்கு அப்படி நடைபெறவில்லை என மிகு மோசமான பொய்யை கடவுள் சந்நிதானத்தில் சொல்கிறார். அடுத்து சந்திரதீபத்தை நிற்பாட்டவும் தன்னால் முடியும் என்றும் பாவம் என்று விட்டிட்டிருக்கிறேன் எனவும் சொல்கின்றார்.

ஆதலினால் இவர்கள் தம் குறை காட்டப்பட்டவுடன் அக்குறையை இனி வெளிவராத படி செய்வதற்கு காடைத்தன மூலம் கொலை மூலம் நிறுத்தப் பார்க்கிறார். நமக்கு நன்கு விளங்கும் முன்னர் இந்து நேசன் பத்திரிகையாசிரியரைக் கொலை செய்வித்தவர் தியாகராசபாகவதர். அவர்க்கு உடந்தையாக கிருஷ்ணன் முதலியோர் இருந்தனர், இப்படியான கொலைகாரப் பாதகர் வழியில் நல்லை ஆதினம் சுவாமிநாதத் தம்பிரான் சிவ தமிழ் செல்வி யாவரும் உண்டு என்பதை நாம் உணராமல் இருக்கவில்லை என நேயர்கள் நினைக்கக் கூடாது.

தியாகராச பாகவதர் நல்லாய் பாடுவார். கடவுள் பேரிலும் பாடி உள்ளார். இன்று அவர் பாடலை ஒலிபெருக்கியில் கோவிலில் போடுகிறார். நமக்கு அதைப்பற்றி ஒன்றுமில்லை, அவர் பாடல் கேட்பார்க்கு பழியைத் தருவிக்கும் என்பதை மட்டும் குறிப்பிடுவேன். கோவிலில் நடக்கும் அநீதிகளை எடுத்துக் காட்ட முன் வந்த நான் ஒருபோதும் பொய்மைக்குப் போகேன். பொய் சொல்லேன். நமக்கு மறியல் வரினும் எங்கும் எப்பொழுதும் உண்மையே பேசுவேன் என்னில் தவறுண்டாயின் அதைக் காட்டினால் நான் நீக்குவேன். என்னில் தவறுண்டாயின் நேரில் ஒப்புக் கொள்வேனேயன்றி இவர் போல் சதி செய்யேன்.

இதுவன்றி நல்லூரில் புத்தூர் மழவராயர் குடும்பம் தருவிப் [illegible] தொண்டு செய்ய ஓர் மடம் கட்டிவைப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது நல்லூர் ஆதினம் இது என்று அம்மடத்தில் கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொண்டது போல் முன்பு மணிஐயராய் இருந்த பிரசங்கி இப்பொழுது பரமாச்சாரிய சுவாமி எனப் பேரிட்டுக் கொண்டு அம்மடத்தை திருஞான சம்பந்தர் மடம் எனப் பேரிட்டு ஏதோ சமயம் தமிழ் இரண்டும் வளர்க்கிறார் எனச் சொல்லிடுகின்றார்.

பெரிய புராணத்தை நன்கு விளங்கினால் இவரது செயலும் நடத்தையும் பேச்சும் அத்தனையும் திருஞானசம்பந்தப் பெருமானது ஞானநெறிக்கு முழுவதும் முரணானது. எதிர்மாறானது. இவரது மடத்தில் இப்பொழுது கலியாணக்காரருக்கும் காசுக்கு இடியப்பம் அவித்துக் கொடுக்கப்படுகிறது. இனி மழவராயர் தருமம் ஓர் ஒட்டலாகி இரவு விடுதியாகும். இவரிடத்தும் உள்ள தவற்றை எமது வேத ஞான முனிவன் திருஞானசம்பந்தர் வாழ்ந்து காட்டிய அறநெறிக்கு முரணாக நீர் வாழ்வது சரியன்று. எமது நாட்டில் சைவநெறியைக் கெடுக்கின்றாய் என்றால் அது அறிந்து தம்பிரான் ஆத்திரப்பட்டு தன் பொய்யை மறைக்க இன்னும் பல பொய் சொல்லுது. அதுவும் கடவுள் சந்நிதிதானத்தில் சொல்லுது. எனது பத்திரிகையை நிற்பாட்ட முடியும் எனவும் வீரம் பேசுது. வித்துவான்களிடம் சொல்லி என்னிடம் இதைச் சொல்லுமாறு சொல்லி அனுப்பி இருக்கு. இப்படியாக தம்பிரான் தன் தவற்றை உணராமல் பதில் என்மீது வெம்புது.

சிவதொண்டன் நிலையத்தில் அன்று ஒரு நாள் ஓர் அதிசயம் நமக்கு ஏற்பட்டது. இப்பத்திரிகையில் ஒன்று சிவதொண்டன் நிலையத்திற்கும் சிலவேளை நேரில் எடுத்துச் சென்று கொடுப்பவன். அப்படிக் கொடுத்திடப் போன வேளை அங்கு சிவதொண்டன் பத்திராதிபரும் வேறு சில அடியாரும் இருக்கக் கண்டேன். எனது பத்திரிகையை ஓர் அன்பரிடம் நீட்ட அங்கிருந்த பத்திராதிபர் என்னை நோக்கி எங்கே எனக்கு உனது பத்திரிகை என்றார். அவரிடமும் ஒன்று கொடுத்தேன். உனது பத்திரிகை சிலவேளை தபாலில் வருகின்றது. சிலவேளை அது கிடைப்பதில்லை. என்ன காரணம்? நீ மறக்கிறாய் போலும் என்றார். அப்போது நான் தனித்த ஒருவன் இப்பத்திரிகையை பல நிலைகளிலும் செயல்படும்போது தவறுகள் ஏற்படும் மன்னியுங்கள் என்றேன். அப்பொழுது அவர் அருகில் இருந்த சிவதொண்டன் நிர்வாகி ஒருவரைப் பார்த்து இஞ்சாருங்கோ இப்பத்திரிகை பற்றிய ஓர் சுவையான சம்பவம் உண்டு, நல்லையா இருக்கும் போது சொல்லப்படாது என்றார்.

நான் சொன்னேன் நல்லாய் சொல்லுங்கள் நமக்கு அது மாறாக இருந்தாலும் நான் கவலைப்படேன் சொல்லுங்கள் என்றேன். அவர் சொல்லத் தொடங்கினார், அன்று ஒரு நாள் நல்லூருக்கு கும்பிடப் போனேன். தம்பிரான் மடத்தைத் தாண்டி அப்பால் போக என்னைக் கண்டு தம்பிரான் கையில் தட்டி கூப்பிட்டார். நான் திரும்பிப் போனேன். தம்பிரான் என்னை வணங்கி மாஸ்ரர் வாருங்கோ என்றார். நானும் வணங்கி என்ன ஐயா விடயம் என்றேன். அப்பொழுது தம்பிரான் என்னிடம் உங்கடை நல்லையா இப்படி எல்லாம் தனது பேப்பரில் எழுதுதே. நீங்கள் இதைக் கவனித்தால் என்ன என்றார், அப்போது நான் அவன் விசரனை விட்டு அவனது பேப்பரை ஒரு காரியமாக நாங்கள் கொள்ளுறதோ எனச் சொல்லி விட்டு அப்பால் போனேன் என்று சிரிப்புடன் பத்திராதிபர் கூறிய பின்னர். மேலும் அவர் அருகிருந்த நிர்வாகி திரு செல்லத்துரை ஆசிரியரிடம் இங்கு பாருங்கள் நல்லையா எழுதுவது முழுதும் உண்மை எனக்கு உள்ளுக்குள் மிகுவிருப்பம் இன்றைய கேவலங்களுக்கு இப்படியும் ஒராள் வேண்டி இருக்கிறது. நல்லையா உண்மையை எழுதுகின்றபோது நாம் அதை தவறு என்று எப்படிச் சொல்வது எனக் கூறி முடித்தார்.

நான் கேட்டுச் சிரித்துக் கொண்டு சிவதொண்டன் தியான மண்டபத்தைச் சுட்டிக் காண்பித்து இது எந்தக் கல்விமானுக்கும் ஒழுக்கம் என்னும் உயர் நிலை அடைய யோகசுவாமிகள் கருணையால் யாழ்ப்பாணத்தார்க்கு செய்து வைத்த தருமம். அதே போன்று நானும் நாயன்மார் காட்டிய அறநெறியை யாழ்ப்பாணத்தார் அறிந்து உய்யும் பொருட்டு எமது பத்திரிகைப் பணி மூலம் தொண்டு செய்கிறேன் எனக் கூறி விட்டு விடைபெற்று மீண்டேன்.

இதனாலே நாம் சொல்வது இன்றும் இது தான். யாழ்ப்பாணத்தில் உண்மை இருக்க மக்கள் பொய்யை மெய் என நம்புகிறார். ஆதலினாலே அருமையில் கிடைத்த பிறவியை இந்த பொய்மை யாளராகும் பிரசங்கிகளை நம்பாது பொய்பிலாத மெய் நெறி நின்ற நாயன் மார் தேவாரங்களை நன்கு ஒதுங்கள் தெளியுங்கள். நீங்கள் உய்ய தமிழ்ச் சமூகம் வாழ கோவிலில் நன்நெறிகள் நிலவ நாம் பணிபுரிகிறோம். பிழையைப் பிழை என்று சொல்வது ஒரு அறமாகும். பிழையை மூடி மறைப்பது மறம். இதை நன்கு தெளிந்தால் மிகுதியாவர்க்கும் விளங்கும்.

கீழே தரப்படும் தேவாரத்து திருநாவுக்கரசர் பெருமான் என் சொல்லுகின்றார் என மன ஒருமைப்பாட்டுடன் ஓதிப் பாருங்கள். அவர் வழியை நாம் பின்பற்றினால் நமக்கு எக்காலும் தீங்கு நேருமோ என எண்ணிப்பாருங்கள்! அவர் என் சொல்லுகின்றார். நாம் என் செய்கிறோம். எமது மூர்க்கமுடைய பொய் நிலைகள் உண்மையோ? தெளியுங்கள். பல ஆண்டுகளாக மது அரசியல் வாதிகள் தரம் குறைந்த சிந்தையாலும் தரம் குறைந்த பேச்சாலும் நடத்தையாலும் நம்மை பல முறை அடிவாங்க வைத்து விட்டார். இதை அவர் ஒப்புக் கொள்ளா விட்டாலும் உண்மை அது தான். திருவருள் நிலையில் தரும விளக்கத்தில் உண்மையான தவவழியில் நாம் நடந்திடுவமேயானால் எமது அயலவர் நம்மைப் பகைப்பதை விடுத்து பதில் நம்மைப் பணிவார்கள். நமது முன்னை பெரியோர் திரு இராமநாதன் போன்றோர் நம் இனத்தை இவ்வளவு தூரம் நலிவுற விட்டுப் பார்த்திருக்கவில்லை. இனி உங்கள் விருப்பம்.

**பன்னியசெந் தமிழறியேன் கலியேன் மாட்டேன் எண்ணேடு பண்நிறைந்தகலைக ளாய**
**தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத் தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி**
**அன்னையையும் அத்தனையும போல அன்பாய் அடைந்தேனைத் தொடர்ந்தென்னையாளக் கொண்ட**
**தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப் பெற்றேன் நானே.**

சிவனே தேவரீர்மேல் முன்னர் பெரியோர் பாடியருளிய செந்தமிழ் ஒன்றும் நான் அறிய மாட்டேன். அத்தகைய பாடலைப் படித்திடவேண்டி ஆசைப்படவும் மாட்டேன். பல வகையாக எண்ணப்படும் பண் நிறைந்த கலைகளையும் அறிய மாட்டேன். உன் திறமும் இவ்வாறு என உணர மாட்டேன். இவ்வாறாக ஏதும் ஓர் நற்புத்தியிலாத பேதையாகிய என்னை தனது சர்வவல்லமையின் திறமையும் அறிவித்து அதனை நன்கு உணர ஒழுக்கம் என்னும் நெறியும் காட்டி பெற்ற தாயையும் தந்தையையும் போல என்னிடத்து அன்பாகி; தந்தை தாயரை அடைந்த பிள்ளையை தாய் தந்தையர் பழுதாகப் போகாமல் பாதுகாத்து நெறிப்படுத்தும் அக்கறை போன்று: சிவனே உன்னை அபயமாக அடைந்து கொண்ட என்னைத் தொடர்ந்து என்னை ஓர் ஆளாகும் படி ஆக்கிக் கொண்ட; தென் திசையில் உள்ள எறும்பி ஊர் என்னும் மலைத்தலத்தின் மேல் இருந்தருளும் மாணிக்கத்தை எம்பெருமான் சிவனை நான் சென்று அடையப் பெற்றேன்.

பன்னிய என்றது தனக்கு முன்பாக உலகில் வாழ்ந்த பெரியோர் பாடிய செந்தமிழ்கள். காலத்திற்கு காலம் யுகங்கட்கு யுகம் தமிழை உணர்ந்து அருள் பாடல்கள் ஓதி உள்ளனர். அப்பாடல்களையே இங்கு குறிப்பிடுகின்றார். அதனை அறியேன் அல்லது அறிய தாகம் கொள்ளேன் என்றதாகும்.

ஆளாக் கொண்டது என்பது சாதலும் பிறத்தலும் தவிரும்படியான உயர்ந்த நிலையில் ஆக்கிக் கொண்டது என்றவாறு. தன்னை அடையச் செய்தலால் தான் ஆட்பட்டுக் கொண்டார் என்பது கருத்து. சிவன் செழுஞ்சுடர் வடிவாய் இருந்தருளுகின்றார். இந்தச் சோதி உணரும் வாழ்விற்கு நெறிதான் முக்கியம். வஞ்சகம் பொய் கபடம் இவையாகாது. பல கலைகள் யாவும் அறிய முடியாத அறிவிலியேன் என்றது கலையின் வல்லபத்தால் புகழ் பொருள் ஆதிக்கம் பெற்றோர் இருப்ப அஃது ஒன்றும் அறியாத எனக்கு தன் திறமும் அதைப் பெறும் நெறியும் காட்டி இவன் உய்யக் கொண்டார் என்றவாறு. இஃது குருவாகி நின்று அருள் புரிந்த நிலை என்றதால் அன்னையையும் அத்தனையும் போல அன்பாகி என்றார். 1

**பளிங்கின்நிழ லுட்பதித்த சோதி யானைப் பசுபதியைப் பாசுபத வேடத் தானை**
**விளிந்தெழுந்த சலந்தரனை வீட்டி னானை வேதியனை விண்ணவனை மேவி வையம்**
**அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும் அருமருந்தை ஆமா றறிந்தென் உள்ளந்**
**தெளிந்தெறும்பி யூர்மலைமேல்மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.**

கண்ணாடிப் பளிங்கில் ஓர் சோதி உண்டு. அந்தச் சோதியே ஒளியாகி நிற்பது. அதே போன்று உலகிற்கு ஓர் ஒளியானானை உயிர்கட்குத் தலைவனை பாசுபத நெறிக்குரிய வேடம் கொண்டவனை உரத்த சத்தமுடன் உலகை அழிக்க எழுந்த சலந்தராசூரனை கொன்றருளியவனை வேத நெறி காட்டி தான் அவ்வாறு ஒழுகிய அந்தணனை; வானமெல்லாம் எங்குமான கடவுளை! உயர நின்று இப்பூமியை அளந்த நாராயணன் ஆனவனை: நான்கு முகமுடைய பிரமனை; எம் அல்லல் தீரவைக்கும் அருமருந்தை; அவன் அன்றி வேறு எதுவும் சதம் அல்ல என்பதை அறிந்து அவனை அடைதலே மெய்ப் பொருள் எனத் தெளிந்து அத்தெளிவால் எறும்பி ஊரில் மலைத்தலத்தின் மேல் இருக்கும் செழும் சுடரைச் சென்று அடையப் பெற்றேன். 2

**கருவையென்றன் மனத்திருந்த கருத்தை ஞானக் கடுஞ்சுடரைப் படிந்துகிடந் தமரர் ஏத்தும்**
**உருவையண்டத் தொருமுதலை யோத வேலி யுலகினிறை தொழிலிறுதி நடுவாய் நின்ற**
**மருவைவென்ற குழல்மடவாள் பாகம் வைத்தமயானத்து மாசிலா மணியை வாசத்**
**திருவெறும்பி யூர் மலைமேல் மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேன் நானே.**

எல்லா உயிரும் தோற்றமாகும் கருவை என் மனத்துள் இருந்த கருத்தை ஞானத்தின் கடிய ஒளியானவனை; (வண்டுதேனில் படிந்து கிடந்துண்டு மெய்மறந்திருத்தல் போன்று) தேவர்கள் படிந்து கிடந்து போற்றிடுகின்ற உருவை; அண்டங்கட்கு எல்லாம் ஒரு முதலை; கடலை வேலியாகக் கொண்ட உலகின் நிறைவை தொழிலை (ஆரம்பம்) முடிவு நடுவாகி நின்றவனை மருமலரின் வாசனை வென்ற கூந்தலுடைய பெண் உமையம்மையைப் பாகம் வைத்த மயானத்தில் நின்றாடும் வாழ்வுடைய மாசு இல்லாத மணியை; வாசனை உடைய மலர்சோலை கொண்ட திருவெறும்பி ஊரில் மலைமீதிருந்த மாணிக்கத்தை செழுமையான சுடரை நான் சென்று அடையப் பெற்றேன்.

வண்டுகள்பூவில்படிந்து கிடந்து மெய்மறந்தவாறு தேன்உண் டுகிடக்கும்: அது வேளை தன் செயல் நினைப்பு யாவும் மறந்தே கிடக்கும். இதே போன்று தேவர்களும் எங்குமாய் நிறைந்த சிவனில் படிந்து கிடந்து மெய்மறந்து போற்றி நிற்பராதலின் படிந்து கிடந்து தேவர்போற்றும் என்கின்றார்: இதனை கலிமிகுதியால் மமதை பிடித்த பித்தருடைய உலகில் எவ்வாறு செய்விக்க முடியும். இதனைத் தொண்டர் கண்டு அண்டி மொண்டு [illegible] இருக்கும் சுத்த ஞானம் என்னும் தண்டை அணிந்த அழகிய தாமரை போலும் திருப்பாதம் என்கின்றார் அருணகிரியார். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகழிபொழிந் தடலரக்கர் புரங்கள் மூன்றும்பாழ்படுத்த பரஞ்சுடரைப் பரிந்து தன்னைப்
புகழுமன்பர்க் கின்பமரும் அமுதைத் தேனைப்புண்ணியனைப் புவனியது முழுதும் போக
உமிழும் அம்பொற் குன்றத்தை முத்தின் தூணைஉமையவள்தம் பெருமானை இமையோ ரேத்துந்
திகழெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேன்நானே.

அம்பினைப் பொழிந்து கொடிய அசுரரது முப்புரங்கள் மூன்றும் பாழாகிப் போகவைத்த பரமாய சுடர் ஒளியான சிவனை; பரிவாகி தன்னைப் புகழுகின்ற அன்பர்க்கு இன்பமாகி மலரும் அமுதத்தைத் தேனை புண்ணியனை; தன்னிடத்தே இருந்து இப்பூமிமுழுவதும் வெளிப்பட்டுவர உமிழ்கின்ற அழகிய பொன்மலை போல்பவனை; முத்தின் தூண்போன்றவனை; உமையம்மையாரின் பெருமானை; தேவர்கள் போற்றிடத் திகழும் எறும்பி ஊர்மலை மேல் இருந்த மாணிக்கத்தைச் செழுமையான சுடரைச் சென்று நான் அடையப்பேற்றேன். 4

பாரிடங்கள் உடன்பாடப் பயின்று நட்டம் பயில்வானை அயில்வாய சூலம் ஏந்தி
நேரிடும்போர் மிகவல்ல நிமலன் தன்னை நின்மலனை அம்மலர்கொண்டு அயனும் மாலும்
பாரிடந்தும் மேலுயர்ந்துங் காணு வண்ணம்பரந்தானை நிமிர்ந்துமுனி கணங்க ளேத்துஞ்
சீரெறும்பி யூர்மலை மேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேன்நானே.

பூதங்கள் உடன் கூடி நின்று பாடிட(தமது அருள்நிலையிலப்பாடிட) தாம் திருக்கூத்துப் பயில்வானை: வேல் போலும் கூரிய வாய் உடைய சூலப் படையை ஏந்தி தமக்கு முன்பாக நேரிடும் போர் எதுவும் வர அதனை அச் சூலப்படையால் அழித்தொழித்து நீக்கும் மலப்பற்று ஏதும் இல்லானை: அழகிய மலர் கொண்டு பிரமனும் திருமாலும் பூமியைக் கிழித்தும் மேலாக உயரப்பறந்தும் காணுதவண்ணம் எங்கும் பரந்தானை; உள்ளம் தெளிவாகி தீங்கிலாவகை நிமிர்ந்து முனிவரும் சிவகணங்களும் போற்றிடுகின்ற சீருடைய ஏறும்பிஊர்மலைமேல் மாணிக்கத்தை செழுமையான சுடரை நான் சென்று அடையப் பெற்றேன்.

பூதங்கள் உடன் பாடப்பயின்று நட்டம் என்பது எல்லா உலகமும் தன் அருளின் காவலாக நிகழ்ந்திட என்றது. அனைத்தையும் ஆக்கி அவரவர் நிலையில் தனித்து தான் இலாது இயங்க வைத்து எனவும் என்க. அவையும் தாமும் ஒன்ருக எனினும் வேருக நின்றவாறு. இதனை தான் அலாது உலகம் இல்லை. சகம் அலாது அடிமை இல்லை. சகமும் தானும் ஒன்றெனினும் வேருக நின்றனர். தனக்கு அடிமையை தானே ஆக்கியவாறு என்க. 5

கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்தமுன்னீர் கரப்பானைக் கடியநடை விடையேன் றேறி
ஊர்பலவுந் திரிவானை ஊரதாக ஒற்றியூர்உடையனுய் முற்றும் ஆண்டு
பேரெழுத்தொன் றுடையானைப் பிரம னேடுமாலவனும் இந்திரனும் மந்திரத்தா லேத்துஞ்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச் செழுஞ்சுடுரைச் சென்றடையப் பெற்றேன் நானே.

கரியமுகிலாகி வந்து மழையைப் பொழிவானை: பொழிந்த நீரை கடலிடத்து ஓடச் சென்று மறைய வைப்பானை; கடிய வேகமுடைய இடபத்தின் மேல் ஏறி ஊர்கள் பலவிடத்தும் திரிவானை; தனது ஊரதாக திருவொற்றியூரை உடையவனுகி முழுவதையும் ஆண்டு தன் ஊரில் கருமம் தானே செய்விப்பவன் என்று ஒற்றி ஊர் நீங்கலாக என எழுதவல்ல பெரும் எழுத்து ஒன்று உடையவனை. பிரமனேடு திருமாலும் இந்திரனும் மந்திரத்தால் போற்றும் சீருடைய எறும்பி ஊர் மலை மேல் இருந்த மாணிக்கத்தை செழுஞ்சுடரைச் சிவனைச் சென்று அடையப் பெற்றேன் நான்.

திரு ஒற்றியூர் ஆண்டவர் இவர் என்ற பேரெழுத்து எவ்வாறெனின். திருஒற்றியூரில் முன் பிருந்த அரசன் ஒருவன் தனது ஆட்சிக்குட்பட்ட கோயில்களுக்கு உரிய படித்திறத்தைக் குறைத்து ஓர் கல்வெட்டுச் செய்தான். ஆனுல் அவன் எழுதிய படிவத்தில் திருவொற்றியூர் நீங்கலாக என சுவாமி இரவு தாமே பொறித்து கட்டளையைத் திருத்தி வைத்தார். மறுநாள் காலை அந்த அரசன் தான் செய்த கல்வெட்டை நோக்கும் போது தனது கட்டளை திருத்தி இருக்கக் கண்டு அதாவது இடைச் செருகல் இல்லாது எழுதிய எழுத்துக்கள் திரும்ப நெருக்கப்பட்டு எழுதி அக்கட்டளையில் திருவொற்றியூர் நீங்கலாக எனப் பொறிக்கப்பட்டிருந்தமையால் இறைவனே இதைச் செய்தார் என உணர்ந்து தன் வரியை எல்லாக் கோவிலிற்கும் முன்பிருந்தவாறே அமைத்தனன். இதனுலே திருவொற்றியூர் பெருமானுக்கு எழுத்தறியும் பெருமான் என்னும் நாமம் ஏற்பட்டுக் கொண்டது. அதுவே பேரெழுத்து என குறிப்பிடப்பட்டது. 6

நீணிலவும் அந்தியும் நீரும் மற்றை நெறியிலங்கு மிருகாலும் ஆகா சம்மும்
வாணிலவு தாரகையும் மண்ணும் விண்ணும்மன்னுயிரும் என்னுயிருந் தானுஞ் செம்பொன்
ஆணியென்றும் அஞ்சனமா மலையே யென்றும்அம்பவளத் திரளென்றும் அறிந்தோ ரேத்துஞ்
சேணெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.

நீண்ட ஒளிதரும் இளம் பிறையும் அழகிய நெருப்பும் நீரும் மற்றை நெறியாக இலங்கும் இருவகைக் காற்றும் ஆகாசமும் ஒளி விளங்கும் நட்சத்திரங்களும் மண்ணும் வானமும் மேலான உயிரும் எனது உயிரும் தானுக நின்றருளும் செம்பொன் ஒளிபரக்கும் மூல ஆணி என்றும் பொன்னின் மலையே என்றும் அழகிய பவழத்தின் திரளே என்றும் அறிந்தோர்கள் போற்றுகின்ற மிக உயர்ந்த எறும்பி ஊர் மலைமேல் இருந்த மாணிக்கத்தை செழுமையான சுடரை சிவனை சென்று அடையப் பெற்றேன்.

உலகில் பொன் மாணிக்கம் பவளம் வைடூரியம் இவையாவும் மங்கலமுடையன. இவை வைத்திருப்பாரை செல்வ நிலையில் வசீகரத்தில் ஆக்குவன. இவைகளை மக்கள் மிகப் பேணிக் கொள்வர். ஆனுல் இவை எல்லாவற்றிலும் சர்வமங்கலமுடையவன் சிவன். அவனே எப்பொருளுமாக நின்றவன். அவனைச் சென்று நான் அடையப் பெற்றேன் என்கின்ருர்: பல உயிரும் தன் உயிரும்சிவம்எனும் உணர்வு மங்களமாயது. 7

அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தைஆரம்பக்குண்டரோ டயர்த்து நாளும்
மறந்தும்அரன் திருவடிகள் நினைய மாட்டா மதியிலியேன் வாழ்வெலாம் வாளா மண்மேற்
பிறந்தநாள் நாளல்ல வாளா ஈசன் பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்துள் அன்பு
செறிந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன்நானே.

அறந் தெரியாத ஊத்தைவாயும் அறிவிவாத சிந்தையில் ஆரவாரமும் விரும்பும் சமணர்களுடன் கூடி மதி மயங்கி நாளும் மறப்பிலும் சிவன் திருவடிகள் நினையமாட்டாது இருந்த மதியில்லாத என்னுடைய வாழ்வெலாம் வீணே மண்மேற் பிறந்த நாளாக நான் கருதமாட்டேன். இவைகள் என்னுடைய நாள் அல்ல. இனி தவருது ஈசன் சிவன் பேரைப் பிதற்றி சிறப்புடைய சிவன் அடிமைத் திறத்துள் அன்பு செறிந்து எறும்பி ஊர் மலை இருந்த மாணிக்கத்தை செழுமையான சுடரைச் சென்று நான் அடையப்பெற்றேன்.

ஆரம்பக் குண்டர்;— என்பது ஆரவாரத்தை விரும்பும் சமணர். இவர்கள் வஞ்சகர் என்றதினுல் குண்டர் எனப்பட்டது. தொண்டர் எனும் சொல்லிற்கு எதிர்மாறுனது குண்டர் எனும் சொல். வஞ்சகர் எப்பொழுதும் தம் வஞ்சனை பெருக்க ஆரவாரத்தை விரும்புவர். இன்று கோவிலில் ஒலிபெருக்கியை விரும்பும் ஒவ்வொருவரும் ஆரவாரம் விரும்பும் குண்டரே அன்றி தொண்டர் அல்ல. இவர்கள் வஞ்சனையின் பெருக்கம் அளவிறந்தது. எனது ஆராய்ச்சியின் படி எனது அருகாமையில் உள்ள கோவில்களில் ஒலிபெருக்கியைப் பாவிக்கும் மக்கள் கூட்டத்தை நோக்கின் உள்ளொன்று வைத்து புறம்பொன்று பேசும் வஞ்சர் கூட்டமேயாக இருக்கின்றது. தீதான பொருள் விற்பனை மூலம் பொருள் திரட்டிக் கொண்டவரும் காவாலிகளும் தமது கௌரவத்தை மிகைப்படுத்திக் காட்டும் புலவர் எனப்பாராட்டப் படுவாரும் இந்த வஞ்சர் கூட்டத்தில் இருக்கக் காணலாம். பிராமணரில் தீவுப்பகுதிப் பிராமணரும் கூடாத நடத்தை உடைய பிராமணரும் ஆரவார த்தை விரும்புகின்றனர். இவர் செயல் நடத்தை அத்தனையும் வஞ்சனையே. 8

அறிவிலங்கு மனத்தானை அறிவார்க் கன்றி அறியாதார் தந்திறத்துஒன்று அறியா தானைப்
பொறியிலங்கு வாளரவம் புனைந்து பூண்ட புண்ணியனைப் பொருதிரைவாய் நஞ்சம்உண்ட
குறியிலங்கு மிடற்றுனை மடல்தேன் கொன்றைச்சடையானை மடைதோறுங் கமல மென்பூச்
செறியெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேன்நானே.

அறிவு இலங்கும் மனமுடைய கடவுளை அறிவார்க்கன்றி அறியாத மக்களின் திறம் செயல் யாவற்றையும் தான் அறியாதானை; பொறிகள் விளங்கும் வாள் போலும் பல் உடைய நாகம் அதனை மாலையாகச் சூடியருளிய புண்ணியனை; பொருதி அலைக்கும் திரைக் கடலிடத்து எழுந்த நஞ்சினை உண்டருளி அதன் நீல நிறமுடை குறி இலங்கும் கழுத்து உடையவனை; பூவின் மடலால் தேன் சொரியும் கொன்றை மலர் சூடிய சடையவனை நீர் மடைகள் தோறும் மெல்லிய தாமரைப் பூக்கள் செறிந்து மலர்ந்திருக்கும் எறும்பி ஊரில் மலைமேல் இருந்த மாணிக்கத்தைச் செழுமையான சுடரை நான் சென்று அடையப் பெற்றேன்

அறிவு என்றது அன்பின் வழி வந்தது. ஆதலின் அறிவு இலங்கும் மனத்தானை என்ருர். அதுதான் சரி பிழை இரண்டும் தாண்டிய அறிவு. அன்பிற்கு அவர் இவர் உவர் என்றதும் சாதி சமயம் யாவும் இலதாதது. அன்பு மிக மிகத் தூயது. உலகம் யாவும் சிவனுடைய அன்பின் அறிவிலே இயங்கு கின்றது. நம்மைப் போன்று கொதியும்கோபமும் மோகமும் தற்பெருமையும் இவையாவும் சிவபெருமானிடத்து இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் எப்பவோ இந்த உலகம் நாசமாய்ப்போம்: சிறிது கோபத்தில் எத்தனை கொலைகள் எத்தனை சச்சரவுகள் வஞ்சனைகள் அடிபிடிகள் நிகழ்கின்றன. ஆசையால் சிவன் இவற்றோடு கலந்தும் தான் இவர் செயலை அறியாதவர் போன்று இருப்பதால் அறிவார்க் கன்றி அறியாதவர் தம் திறத்து ஒன்று அறியாதானை என்றார். இந்த உண்மைகளை அறிந்தவர் தான் சிவனை அறிவார் எனப் படுதலால் அறிவார்க் கன்றி என்றதாகும். பகையை அன்பினால் தான் வெல்லலாம். சிவனடியார்கள் அன்பினால் உலகை வெல்வார் என்பது பெரிய புராணம். வஞ்சனை நீக்கிய நெஞ்சத்து உதிக்கும் அன்பு எத்தகைய பகையையும் தாண்டி அப்பால் செல்லும். பூரண ஞானம் அன்பின் வழி அன்றி யார்க்குமே பெறமுடியாது. சிறிது தற்பெருமை தன்னிடத்து உதித்தால் உடன் அன்பு சிறகு கட்டிப் பறந்திடும். இதனை கல்லாடர் பெருமான் தன்னை உணர்ந்து தானும் ஒன்றின்றி எனக் கூறுகின்றார். அன்பினால் தான் காமாதி இச்சைகளையும் வெல்லலாம் என்கின்றார் பெரியோர். யோக சுவாமிகள் அன்பே வடிவாய் அமைந்த துறவி எனத் தம்மைச் சொல்லுகின்றனர். இதற்கு தக்க சான்று அன்பு என்றது ஆசையிலாதது என்பதுமாகும் 9

**அருந்தவத்தின் பெருவலியால்அறிவ தன்றிஅடலரக்கன் தடவரையை யெடுத்தான் திண்தோள் முரிந்துநெரிந் தழிந்து பாதாள முற்று முன்கைநரம் பினையெடுத்துக் கீதம் பாட இருந்தவனை யேழுலகு மாக்கி னானை யெம்மானைக் கைம்மாவின்உரிவை போர்த்த திருந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.**

அரியதவத்தின் பெருவலியால் சிவனை அறிவது அல்லாமல் அடல் மிகுந்த இராவணன் தன்வலியால் கைலைமலையைத் தூக்கிடுவேன் என கைலைமலையை எடுத்த இராவணனது திண்ணிய தோள் முறிந்து நெரிந்து அழிந்து பாதாளம் முற்றும் போய்த் தாண்டு அங்கிருந்து முன் கை நரம்பினை பிய்த்தெடுத்து இனிய கீதம் பாட உடன் அந்த இராவணனை ஏழு உலகமும் புகழ் பரவும்படி ஆக்கிய பெருமானை என் தெய்வத்தை கொடிய துதிக்கையுடைய யானையின் தோலைப் போர்த்த திருந்திய எறும்பி ஊர் மலை மேல் இருந்த மாணிக்கத்தை செழுஞ்சுடரைச் சென்று அடையப் பெற்றேன் நான்.

சிவத்தைப் பேணலே தவத்திற்கு அழகு அன்புதான் சிவம் பூரண அறிவே சிவம். தவத்தின் வலியால் தான் சிவத்தை உணரலாம் அன்றி வேறு வழியால் உணர முடியாது. தவம் என்பதற்கு தனக்கு தரப் பட்ட தொண்டை அல்லது பணியை உலகில் கரவின்றிச் செய்தலும் அத் தொண்டில் ஓர் உயிர்க்கும் தீங்கோ துயரமோ செய்யாதிருப்பது தான் தவத்தின் ஓர் உருவம் என வள்ளுவர் மொழிகின்றார். உற்ற நோய் நோன்றல் என்பது பிறவியில் தனக்குற்ற செயலை பணியை செய்தல் என்றதாகும். இதிலே உயிர்க்கு உறுகண் செய்யாமை தான் முக்கியம் என்றதால் உயிர்க்கு உறுகண் செய்யாமை வலி உறுத்தப்பட்டது. ஆகவே அருந்தவத்தின் வலி ஆசை இல்லாதவர்க்கு பற்று அற்றவர்க்கே உள்ளது. இந்த ஒருவழியால் நாம் சிவனை அறியலாம் அன்றி வேறு வகையால் அது கை கூடாது. 10

# வேதாந்த நெறிக்குரிய கதா உபநிடத வாய்மை மொழிகள் சில.

**சைவத்தில் வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இருநெறியில் பாட்டுக் கச்சேரியும் விழாவும் பட்டமும் பணம்பறிப்புமாக சைவ சித்தாந்தம் பாழாகி உள்ளது. சைவசித்தாந்தத்திற்குரிய வழி பாட்டுமுறைகள் வைதிகமுறைகள் மிலேச்ச நெறியால் அழிக்கப் பெற்றன. சித்தாந்த வழியால் இனி கடவுள் அருள் நாடல் பழுதானமையின் வேதாந்த நெறிகளையாதல் மக்கள் உணர்ந்து உய்யும் பொருட்டு உபநிடத வாய்மைகள் சில கீழே தரப்படுவது.**

இன்று பலர் தம்மை வேதாந்திகள் சுவாமிகள் எனப் பேரிட்டுக் கொண்டு தம்மை வடிவாகச் சாமிக்கோலம் பண்ணி மிகுத்திறமான காரில் பறந்தடிக்கிறார். பெரிய பெரிய உத்தியோக பணக்கார வீடுகளில் சகவாசம். அவர்களைக் கடவுளுக்கு மேலாகக் கருதி சில மக்கள் நிற்கிறார்கள். உண்மையில் இவர்கள் யாவருமே வேதாந்திகள் அல்லர். தாயுமானவர் இவர்களை வாய் வேதாந்திகள் எனச் சரியாகச் சொன்னவர். அருணகிரியார் இவர்களைத் திருப்புகழில் கேலி செய்துள்ளார். எல்லாப் பற்றும் நீங்கிய உண்மை உணர்வே வேதாந்தம். வேதாந்த நெறிக்கு ஓர் விளக்காக சமீப காலத்து வாழ்ந்த ஒரு பெரியவர் செல்லப்பா சுவாமிகள்.

இவர் தான் உண்மையான பற்றற்ற நிலையில் நின்றவர், ஓர் பைத்திய காரன் போல் நடித்து விட்டு உண்மையைப் பெற்றுக் கொண்டு மறைந்தருளி விட்டார். இவர் உபதேசம் பெற்ற யோகசுவாமிகள் உயர்ந்த ஞான நிலை அடைந்தது செல்லப்பா சுவாமிகளின் உண்மை ஒழுக்கத்தால் எழுந்தது எனலாகும். கீழாகத் தரப்படும் உபநிடத வாய்மை மொழிகளால் இவைகளை நீவீர் உணரலாம்.

வேதாந்த நெறிகளில் மிலேச்சரது சகவாசமோ அல்லது நாகரீகமோ இடைப்புகுந்தால் முடிவு துன்பமே யாகும் என்பதை யாவரும் நீர் நன்குதெளிய வேண்டும்.

முன்பு தீபத்தில் தரப்பட்ட கதா உபநிடதத்தில் இயமன் நாச்சிகேதனுக்கு செய்த உபதேச மொழிகளைக் கீழே காண்கிறீர்கள். இவை உபநிடதங்களின் உண்மை மொழிபெயர்ப்பாகும்.

## கதா உபநிடதம்

1. என்றும் கேடிலாத நன்மைப் பொருள் ஒன்று. மனதிற் கினிய இன்பமாகும் போகங்கள் இன்னொன்று. இவை இரண்டும் வெவ் வேறு தேள்வைகளைப் பூர்த்தி செய்வன. இரணடிலும் கேடிலாத நன்மைப் பொருளை விரும்புவன் உண்மை நெறிக்கு என்றும் உள்ள நித்தியப் பேற்றிற்கு ஆளாகின்றான். ஆனால் போக இன்பங்களை பெறுபவன் எல்லாம் சென்று ஒடுங்கும் முடிவான பொருளை இழந்து விடுகின்றான்.

2. பிரம்ம சொரூபமான தற்பரமும் போக இன்பமும் மனிதனிடத்து உண்டு.மன அடக்கமுடைய உயிர் இதனை உணர்ந்துஇரண்டையும் பிரித்தறியும். பிரித்தறிந்து தற்பரமான தன்னில் தான் என்னும் நலனை எடுத்துக் கொள்ளும். ஆனால் மடையன் இன்பத்துறையையே விரும்புவான். ஏன் எனில் இன்பத்துறையில் கொண்ட வாஞ்சையாலும் பேராசையாலும் அந்நிலை அவனைச்சேர்கின்றது.

3. நாச்சிகேதனேகேள்! நன்றாக நீ மண் பொன் பெண் எனும் மூன்றாலும் விளையக்கூடிய இன்பங்களையும் இவற்றால் ஆனந்தம் இவ்வுலகில் இவை தான் என்று எழும் மன எழுச்சிகளையும் சிந்தித்து தெளிந்து உண்மை அறிவை உணர்தற்கு இவை உதவா என நீக்கி உள்ளாய்! பொருள் ஈட்டற்குரிய வழியையும்நீக்கி உள்ளாய்.இவற்றில் தான் பெருமளவு மனிதர் ஆழ்ந்து போகின்றனர்.

4. நாம் சொல்லிய தன்னிடத்துள்ள தற்பர நலனுக்கும் போக இன்பங்களுக்கும் உள்ள இடைவெளியை அவதானித்தால் அவை மிகப்பெரிதாகும். ஒன்று அறியாமை. அடுத்து அறிவு. இப்பொழுது நாச்சிகேதனே நான் உன்னை அறிவை விரும்பி நாடும் ஒருவனாகக் காண்கின்றேன். அந்த நிலையில் நின்றும் எந்தவிதமான இன்பங்களும உன்னைக் கிழ் இறக்க முடியாது நீதிடமுற்று நிற்கின்றாய்.

5. அறியாமையான இருட்டில் இருக்கும் மடையர் தங்களைத் தாமே புத்திசாலிகள் என எண்ணிக் கொள்வர்! அவர்கள் தம் இச்சை வழி சுழன்று சுழன்று வருவார்கள். வெவ்வெறு கடினபாதைகளால் சுழன்றடிப்பார்கள்; எவ்வாறு எனின் குருடன் குருடற்கு வழிகாட்டல் போன்றதாகும்.

6. பின்வருங்காலம் என் நிலையிலும் ஒருக்காலும் தன் செயல் பற்றி முன் அறிவித்தல் தருவதில்லை. இன்பத்திற்கும் உண்மைக்கும் வித்தியாசம் காணார்க்கு அது தன்நிலை உணர்த்தாது. பொருளின் நலத்தால் மூழ்கி இருப்பார்க்கு இதன் நிலை தெரியாது! பொருளும் போகமும் பெறுபவன் இந்த உலகம் ஒன்றே இருக்கின்றது என நினைவான். இதை விட வேறில்லை என எண்ணுவான். இவன் எனது பாசவலைக்குஆளாகி கர்மியாகி மரணமடைவான்.

7 அநேகர் ஆத்மாவைப் பற்றிய செய்திகளை கேள்விப் படுவதில்லை; அந்த ஆத்மாவாகும் (சிவன்) எப்படி என சிந்திப்பதில்லை. ஆனால் ஆன்மாவை உணர்ந்தவர் மேலான ஆச்சரியப் படத்தக்க சித்தி உடைவராகின்றார். ஆன்மாவைப் பற்றி விசாரிப்பவர் மிகவும் அரிதானவராகின்றார். இதிலும் உண்மையான ஆத்மா ஞானியால் உணர்த்தப் பட்டு உணர்ந்தவர் இன்னும் மிக அரிதாக உளர்,

8 ஆத்ம உணர்வு ஓர் தகுதியிலாத (உலகபந்தத்து மூழ்கிய கீழ் நிலையில் இருக்கும்) மனிதரால் போதிக்கப் படும் பொழுது அதன் உண்மை நிலை உணரப் படுவதில்லை. ஏன் எனில் அது வெவ் வேறு கொள்கையில் சச்சரவுக் குளதாக வந்து சச்சரவாளர்களால் வேறு வேறு விதமாகக் கருதப் பட்டு விடும்.

9 ஆன்மாவின் பூரண அறிவு அநுமானித்தல் வாதாட்ட மூலம் பெற முடியாது.ஓ! அன்பனே! உணமை உணர்ந்த ஆத்ம ஞானியால் போதிக்கப் படும் பொழுது ஆன்ம உணர்வு தானகத் தலைப்படும் நிலையில் மிகு இலகுவாகப் பெறப்படுவது. நீ இப்பொழுது இந்தப் பூரண அறிவை (ஆத்மசொரூபம்) பெற்றுள்ளாய் நீ உண்மையில் உண்மையை உணரும் தாகத்தைப் பெற்றுக் கொண்டாய். உன்னைப் போன்ற தாகமுடைய ஆன்மா பற்றி விசாரிப் போரை எப் பொழுதும் நாம் பெற்றுக்கொள்வோமாக!

10 எனக்கு நன்கு தெரியும் பொருள்களைக் கொண்டு தேடிப் பெறும் இன்பம் ஆன்ம உணர்வாகாது. ஏன் என்றால் எது தெய்வத் தன்மை உளதாக உளதோ அது தெய்வத் தன்மை இலாத செய்கைகளால் பெற முடியாது. நானும் உனக்கு உபதே சித்த நாச்சிகேதம் எனும் அக்கினி காரியத்தால் (யாகத்தால்) எனது இந்த இயமன் என்னும் பதவியைப் பெற்றுள்ளேன். எனினும் யாகாதி கருமங்களில் நான் பாவித்த பொருள் தெய்வத் தன்மை இலாமையின் என் பதவியும் உண்மையைப் போலும் தெய்வத் தன்மை யானவை.

குறிப்பு;... உண்மையைப் போலும் தெய்வத் தன்மை என்றதால் பிரம்ம உணர்வு எப்பொழுது கை கூடிடும் யாருக்குக் கை கூடிடும். என்றால் இந்த உலகில் சகல வித போக இன்பங்களையும் பதவிகளையும் நீக்கினார்க்கே கை கூடிடும். யாகமு கருமங்களும் ஒரு வகையில் மேலான பதவிகளைத் தந்தாலும் தெய்வீகம் போல இருப்பினும் உண்மை அல்ல என்றதால் எனது தெய்வ நிலையும் உண்மைபோலும என்றான் இயமன்

11 எல்லா ஆசைகளின் பூர்த்தியும் உலகங்களின் மூலத் தோற்றமும் யாகாதி கருமங்களின் அளவிறந்த பயன்களும் (பெறு பேறு) அச்சம் பயம் என்பது அறியாத (சஞ்சலமற்ற) கரையும் அது தான் ஆனந்தமானது. போற்றற் குரியது. பெரிதாக உள்ளது. (பிறப்பு இறப்பு அற்றது) எல்லாமாகி பூரண நிறைவாகி உள்ளது. அதுவே எல்லை! இதை எல்லாம் நீ கண்டுள்ளாய். நாச்சிகேதனே நீ புத்திசாலி யானமையின் இதற்கு மாறாக எழும் எல்லா உணர்வுகளையும் உனது திடமான நம்பிக்கையாலும் பிரதக்ஞையாலும் நீக்கிக் கொண்டாய்!

12 தன்னில் தானாக இருக்கும் கடவுளிடத்து [பிரம்ம] தியானத்தால் ஓர் அறிவாளி மூல நிறைவு குறைவின்றி நின்ற மூலப் பொருளில் மிகப் பழமை யானதைப் பெறுகின்றான். அப்பொருள் ஒன்றே காண்! அது காண்டற்கு அரியது! சிந்தித்தற்கு (கற்பனை செய்வதற்கு) அரியது! மறைவாக உள்ளது! (மனத்துள்) புத்தியுள் இருப்பது! உடம்பினுள் உறைவது. இதனை உலகில் பெற்றவன் உலகில் இன்பம் துன்பம் இரண்டையும் நீக்கியபூரணவனாகின்றான்.

(மேற்காட்டிய உபநிடத வாய்மைகளையும் அதன் முன் தந்த திருவாசகத்தையும் தேவாரத்தையும் ஒப்புநோக்கி உண்மை உணர்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பத்தாறு கலவரம் வருதற்கு ஆறுமாத முன்பு ஒருநாள்

## ஐயோ சிங்களவன் தமிழனை அடிக்கிறுன் என அங்கு மிங்கும் கதறி ஓடினுர் யோகசுவாமி.

இப்படியாக ஒரு செய்தியை திருநெல்வேலியைச் சேர்ந்த ஒரு அன்பர் நம்மிடம் தெரிவித்தார். தொடர்ந்து அவர் என்னை நோக்கி இங்கு பாருங்கள் நான் அக்காலத்தில் இரத்மலானையில் கடமை புரிந்தேன். என்னுடன் என் குடும்பமும் இருந்தன. நீண்டகாலமாக எனக்கு மனிதனுக்கு உண்மையான விடுதலை எங்கிருக்கிறது?. இந்த விடுதலை மூலமாக பெறும் நிலையாது? என்பதான எண்ணங்கள் என் இதயத்து உதித்து நின்றதால் நான் யோகசுவாமியைப் பல முறை சந்தித்திருப்பேன். சுவாமிகளை எனக்கு என் நினைவில் உறுதுணையாளராகப் பெற்றுக் கொண்டேன்.

இந்த நிலையில் உண்மை விடுதலை அன்பின் நிலையில் அகிம்சையில் பெறலாம் என்ற உறுதி பெற்றுக் கொண்டேன். இதனுலே நான் கடமை புரியச் சென்ற இரத்மலானையில் அயலவரான சிங்கள மக்களுடன் மிகு அன்னியோன்ன மாகப் பழகி அதனுலே அவர்களுடைய உயர்ந்த மதிப்பை பெற்றுக் கொண்டேன்.

இந்த நிலையில் நீங்கள் நம்புவீர்களோ அறியேன் ஆனுல் 1956ம் ஆண்டுக் கலம்பகம் தொடக்கத் தினத்தன்று நாம் ஓர் விசேட பிளேனில் இரத்மலானையில் இருந்து எமது யாழ்ப்பாணதிற்கு திரும்பக்கூடியதாக இருந்தது. நான் மட்டன்றி என்னுடன் அங்கு இரத்மலானையில் இருந்த வேறு தமிழ் குடும்பங்களும் யாழ்ப்பாணம் வந்து சேரக் கூடியதாகஇருந்தது.

நான் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விடிந்ததும் யோகசுவாமியிடம் சென்றேன். என்னைக் கண்டதும் சுவாமி இருக்கும் படி சொல்லி ஓர் புத்தகத்தை நீட்டி இதை வாசியும் என்ருர். அது புத்தருடைய உபதேசம் கொண்ட வரலாற்றுப் புத்தகம். அதில் புத்த பகவானுடைய உயர்ந்த இலட்சியங்கள் நிறைந்த அத்தியாயம் முழுவதும் வாசித்தேன். சுவாமி கேட்டுக் கொண்டிருந்தார். அதில் அன்பின் உயர்ந்த பெருமையும் அகிம்சையின் சிறப்புக்கள் பற்றியும் கருத்துக்களை புத்தபகவான் போதித்தன முதலாவது அத்தியாயத்தில் காட்டப் பெற்று இருந்தன.

இது நடக்கும் நேரத்து அன்று அங்கு கலம்பகம் கடூரமாக நிகழும் நேரம். என்ன அதிசயம் கலம்பகம் நீடிக்காது ஒரு நாளுடன் நின்றதை பின்னர் உணரக் கூடியதாக இருந்தது. அது மட்டுமிலாது சுவாமிகள் வாசிக்கச் சொன்ன புத்தரது போதனைகளில் ''தீதும் நன்றும் பிறர்தர நமக்கு வருவதில்லை'' என்ற உண்மை விளக்கமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கப் படுவதை நான் உணரக்கூடியதாக இருந்தது.

நான் நினைக்கிறேன் சுவாமிகலும் இந்த உண்மை அடிப்படையில் தான் நமக்கு அவை உபதேசமாகும் படி உறுதிப்பட அப்பகுதியை நம்மை வாசிக்கும் படி சொல்லி இருப்பார். வாசித்துமுடிந்தபின்னர் அடுத்து சுவாமியுடன்சில வார்த்தை பேசி வணங்கி விடை பெற்றுக் கொண்டு சுவாமியினது இருப்பிடத்தை விட்டு நீக்கினேன். நீங்கி நேராகசுவாமியினது ஆச்சிரமத்து அயலில் உள்ள எனது உறவினரது வீட்டுக்குச் சென்ருேம்.

அங்கு சென்று கலவரத்தில் நின்றும் ஏதும் ஒரு தீங்கும் இல்லாவகை விசேட பிளேனில் கடந்த இரவு வந்தோம் எனக் கூறி; பின்னர் காலையில் சுவாமியிடம் வந்ததும் சுவாமி புத்தரினது போதனைகள் கொண்ட ஓர் புத்தகத்தை தந்து நம்மை வாசிக்கச் சொன்னமையும்; அதில் அன்பு அகிம்சை முதலிய அறங்கள் போதிக்கும் பகுதியை விளக்கி உள்ளமையான பகுதிகளை வாசித்ததையும் கூறினேன்.

உடனே அங்கிருந்த ஓர் அம்மை நான் சொன்னதைக் கேட்டுபின் இதைச் சொன்னுர். இங்கு பாருங்கள் கிட்டத்தட்ட ஆறு மாச காலத்திற்கு முன்பு ஒரு அதிசயம் சுவாமிகள் ஆச்சிரமத்தில் நடைபெற்றது. ஒருநாள் மத்தியான வேளை யோகசுவாமி தனது ஆச்சிரமத்து இருந்தால் போல் வீராவேசம் கொண்டு எழுந்தார். எழுந்துவெளியால்வந்து ஐயோ சிங்களவன் தமிழனை அடிக்கிறுன் அடிக்கிறுன் என இங்கும் அங்குமாக ஓடிக் கதறினுர்.

நாங்கள் எல்லோரும் இதென்னடா சுவாமி இப்படி ஓடி ஓடிக் கதறுருர்! என்ன சுவாமிக்கு மூளை பழுதாகி விட்டதோ? இனி என்ன செய்வது எனப் பயந்து இருந்தோம். இப்படி கொஞ்ச நேரம் சுவாமி கதறி ஓடித்திரிந்த பின் ஆறுதலாகி தமது இருப்பிடத்து அமைதியாகச் சென்றிருந்தார்.

எங்கள் தெய்வம் இப்படியாக தமிழருக்கு நேரப் போகும் ஆபத்தை முன்பே உணர்ந்து தான் கதறி அந்தரப் பட்டு தமிழரைக் காப்பாற்றி உள்ளார் என்பதை இன்று உணர்கிறேன். அப்போது இதன் உண்மை உணராது நாங்கள் சுவாமிக்கு விசராக்கியதோ எனச் சந்தேகித்தோம். எவ்வளவு பெரிய தவறு. உண்மையில் யோகசுவாமியினுடைய பெருமை உணர்வது அரிது. அவர் செயல் பார்த்தால் பைத்தியம் போல சில வேளை தென்படும். ஆனுல் அதில் எவ்வளவோ அருள் தங்கி இருக்கிறது என அம்மை கூறி அன்று நடந்த நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி அதிசயப் பட்டார். பாத்தீர்களா சுவாமி நமக்காகச் செய்த அற்புததத்தை என இச் செய்தியை தெரிவித்த திருநெல்வேலிஅன்பர் நம்மிடம் கூறி முடித்தார்.

அப்போது நான்அவரை நோக்கி உண்மைஞானியால்யாவும் முன் கூட்டியே உணரப்படும். இதைநால்வர் பெருமக்ளும் உணர்ந்துள்ளனர். இதனை சுந்தரமூர்த்திச்வாமிகள் தமது தேவாரம் ஒன்றில் ''வானுல் வருவிதியே'' எனக் கூறி நிற்கின்ருர், அதுதான் தீதும் நன்றும் பிறர்தரவாரா என சொல்லிய தத்துவத்தை சுவாமி உமக்கு அன்று உணர்த்தியதாகும்.

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் செய்யும் செயல் யாவும் அதன் பிரதி பலிப்பு வானில் தொடாகின்றது. அன்ருடம் செய்த செய்த செயல்கள் யாவும் அவை அவைக் கேற்ற மறு செயலாக இன்பம் இன்பமாகவும் துன்பம் துன்பமாகவும் மாறி வருதலில் விதியாகின்றது. ஊழ் என்றும் சொல்வார். இதை அவ்வினைக் கிவ்வினை எனச் சும்பந்தர் கூறுகின்ருர். இதை அறிவார் மிகச் சிலரே. இந்த ஊழ்களின் கருமமாக கடவுளே அமைகின்ருர் என்பது கந்தபுராணம் ஆதலின் உண்மை உணர்ந்து உய்யும் நெறி நாடினுர்க் கன்றி இவற்றை வெல்லும் திறன் யார்க்கும் அரிது எனலாம்.

இதற்காகவே நாமும் எமது பத்திரிகை மூலம் தமிழ் மக்களை ஆலயத்தில் பொய்மையைப் பெருக்காதீர். துயரைப் பின்னுல் ஏற்படுத்திக் கொள்ளாதீர். வழிபாட்டு இடங்களை மிகத் [illegible] எத்தனியுங்கள் எனச் சொல்கின்ருேம். பலர் [illegible] என்ன நினைத்தாலும் எனது நிலையில் எம் தமிழினம் இனியும் துன்பப்படாதிருப்பின் முதற்கண் வழிபாட்டு இடங்களில் உண்மை தழைக்கட்டும். அன்பு நெறியும் அருள் நெறியும் பரவட்டும். போலிக் கௌரவங்கள் மிலேச்ச நெறிகள் அகலட்டும் எனச் சொல்கின்ருேம் எனக் கூறி விட்டு விடை பெற்று மீண்டுகொண்டேன்.

# பண்டத்தரிப்பில் பருளாய் ஐயர் தீபத்தைக் கண்டு பரிதவிப்பு.

பண்டத்தரிப்பில் பருளாய் ஐயர் ஒருவர் ஓர் தேநீர் கடையில் சோடாக் குடித்துக் கொண்டு நினருர் அக்கடை சைவக் கடை. நீண்ட காலமாக ஓர் சைவர் அக்கடையை நடத்துகின்றவர். அன்று அவரது பிள்ளைகள் கடையில் நின்ருர். அவர்கள் தினசரி பத்திரிகை ஆனந்தவிகடன் முதல் சஞ்சிகைகள் நாவல்கள் இவையும் விற்பவர். அவர்கள் என் பத்திரிகையும் வாங்குபவர்கள். ஆதலால் என் பத்திரிகையை கொடுக்கும் படி கடையின் வாய்தலில் நுழையும் போதே ஐயர் சோடாக் குடித்துக் கொண்டு நின்ருர், கொஞ்சம் கொஞ்சமாக குடிப்பதும் பின்னர் கதைப்பதுமாக கடைக்காரர் முன் மேசை அருகில் நின்ருர். கீறில் சடை நெற்றியிலே பொட்டு முகத்தில் கோரப் பார்வை இவைகள் இருந்தமையால் ஐயரோ வேரு எனச் சந்தேகித்த வாறு வாய்தலில் நின்ற கடைக்காரரிடம் என் பத்திரிகையை நீட்டினேன். அவர் வாங்கிக் கொண்டு ஐயர் நின்ற பக்கம் போனுர் நான் வாய்தலில் நின்றேன்.

ஐயர் இப்பத்திரிகையைக் கண்டதும். ஐயோ இதை விற்காதீர். இது மோசமான பத்திரிகை. இவன் பிராமணரை கண்டபடி கண்டிக்கிருன். பச்சைக் கெட்டவன். ஐயமார் தவறுகளைக் காட்டி விட்டு பதில் சொல்லச் சொல்லுருன். தனக்கு அடிக்க முன் தன் கேள்விக்கு பதில் சொல்லச் சொல்லுருன. இவனுக்குச் தெல்லிப்பழைச் சந்தியில் வைத்து துர்க்கை அம்மன் கோவிலடியார் நல்லாய்க் குடுத்தவர். அடியும் வாங்கி வாங்கி இன்னும் எழுதுருன். அங்குள்ள பொடியளும் எங்கடை ஆட்களும் இப்படி நடந்தது எனச் சொன்னவர். அவனுக்கு அது பத்தாது, அவனுக்கு கூடக் குடுக்க வேண்டும்,

நான் இதில் சோடா குடிப்பதை இந்த வழியால் அவன் போகும் பொழுது கண்டிருந்தால் கீறில் தலையுடன் நின்ருன் பிராமணன் சோடாக் குடித்தபடி என எழுதுவான். அதிலும் இப்ப உங்களிடம் வாங்கிய புத்தகங்களைக் கண்டால் இன்னும் மோசமாக எழுதுவான். அவர் கையில் வைத்திருந்த புத்தகங்களில் மலர்ந்த புன்னகையுடன் இருக்கும் பெண்ணின் படம் முகப்புப் படமாக இருந்தது, நான்கு புத்தகம் வாங்கி வைத்திருந்தவர், அது எல்லாம் நாவல்கள் எனகடைக்காரர் ஐயர் போனபின் தெரிவித்தார்.

இந்த நிலை கடைக்காரருக்கு மிக சங்கடமாக இருந்தது, அவர் என்னைக் காட்டிக் கொடாதவாறு ஐயரிடம் அவர் ஏதோ ஐயமாற்றை குறையை எழுதினுல் கூடப்பத்திரிகை விற்கலாம் என எண்ணி அப்படிச் செய்கின்ருர் போலும். அதிருக்கட்டும் ஐயா இந்தாருங்கள் வெற்றிலை போட்டுக்கொண்டு நீங்கள் வாருங்கொ என்றதும் ஐயர் வெற்றிலையைப் போட்டுக் கொண்டு பொயிலை காணுது கொஞ்சம் தாருங்கோ என கேட்டதும் கடைக்காறர் கொஞ்சம் பொயிலையைக் கிள்ளிக் கொடுப்ப! ஐயர் வாங்கிக் கொண்டு புத்தகத்திற்கு காசு 12 ரூபாய் மேல் எனக் காணக் கூடியதாக இருந்தது, கொடுத்ததும கடைக்காறர் மிச்சக் காசைக் கொடுக்கப் போக சீச்சீ இருக்கட்டும் பிறகு எடுக்கலாம் எனக் கூறிவிட்டு என்னைக் கண்ணுல் காட்டி ஆர் இவர் என்று குறிப்பால கேட்டலும் கடைக்காரர் அவர் சந்தேகித்த பேர் வழி நான் அல்ல என்று தலையசைப்பால் காட்ட ஐயர் போனுர்,

போனதும் கடைக்காரர் என்னை நோக்கி ஐயர்மார் சிலருக்கு பிடிக்குதில்லை என சிரிப்புடன் கூறிவிட்டு எனது பத்திரிகைப் பணத்தைத் தந்தார், நான் பெற்றுச் கொண்டு ஐயர் எங்குள்ள ஆள் எனக் கேட்டதும் கடைக்காரர் வெளிப்படுத்திட மனமிலாது உவர் உந்த சுழிபுரப் பக்கம் தான் இருக்கிறவர்- பருளாயில் அருச்சனைக்கு நிற்கிறவர். கண்டு பழக்கம். தெரியாதே கோயிலுக்கு அங்கை போனுல் கொஞ்சம் எங்களுடன் மதிப்பாக நடப்பவர், ஆதலினுல் நாங்களும் இஞ்சைவந்தால் கொஞ்சம் கனம் பண்ணுறது என்று விட்டு ஏன் பாருங்கோ ஐயர்மார் கடையில் சோடாக் குடிக்கக் கூடாதோ என்ருர், அப்பொழுது நான் சொன்னேன் தம்பி நான் ஒருநாள் சோடா தயாரிக்கும் கம்பனி ஒன்றை கொழும்பில் போய் கண்டபின் குடிக்கிறதில்லை. ஐயர்மார் பலரும காண நின்று குடிப்பது சரி இல்லை, அவர்கள் கடவுளுக்கு தொண்டு பூசை செய்வதால் சில ஒழுக்கம் தேள்வை, இதற்காகத் தான் ஐயர்மார் கண்காணச் சாப்பிடக் கூடாது என பரியோர் சொல்வார் எனக் கூறி மீண்டேன்,

## தங்க உருத்திராக்க மாலை காணவில்லையாம்.

நீர்வேலிக் கந்தசாமி கோவிலில் ஒருவர் பழனியாண்டவர் மூர்த்தி ஒன்றை கோவிலில் சில காலம் முன்பு பிரதிட்டை செய்வித்திருந்தார். சுவாமிக்கு சாத்தும் படி தங்க உருத்திராக்க மாலை விலை உயர்ந்ததும் ஒன்று செய்வித்துக் கொடுத்தாராம். அக் கோவிலில் சில நாள் முன்பு கதவை எரித்து ஓட்டை துளைத்து களவு போனதாம். அப்பொழுது பொலிசில் இயந்திரத் தகடு முதலியன களவு போனதாகக் கூறப்பட்டதாம். தங்க உருத்திராக்க மாலையும் போனதாக சொல்லப் படவில்லையாம். பின்னர் இம்முறை பழனியாண்டவர் உற்சவத்தின் போது தங்க உருத்திராக்க மாலையை ஏன் சுவாமிக்கு சாத்தவில்லை? எனக் கேட்ட போது அது களவு போன பொருளுடன் போயிற்றது எனக் கூறப்படுகிறதாம். பெரும் தொகையான பண முடைய உருத்திராக்க மாலை களவு போனதாய் இருந்தால் பொலிசில் ஏன் அப்பொருள் அன்று பதியப் படவில்லை என்ற கேள்வியை சிலர் எழுப்பு கின்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய றேற்றில் பிரதிட்டாரத்தினம்

புங்குடுதீவைச் சேர்ந்த ஓர் ஐயர் புங்குடுதீவில் உள்ள முருகன் கோவிலில் வைத்து பிரதிட்டா இரத்தினம் என நல்லை ஆதின பரமாச்சாரியால் பட்டம் சூட்டப் பெற்றவர். இவர் ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவிலில் தற்பொழுது வாழ்பவர். அங்குள்ள பெரும் சாதிக் குடும்பங்களின் குடும்பக் குருக்களுமாவர். கோயிலில் பூசை செய்பவர். ஆனால் முதனாள் சாத்திய பூ நீக்காமல் மறு நாளும் பூசை செய்ய வல்லவர் என திருப்பணிச் சபையால்சிறப்புரைக்கப் பட்டவர்

இவர் பிரதிட்டா இரத்தினப் பட்டம் பெறுவதற் காகவே தனது ஊரில் புங்குடுதீவில் போய்க் கொடியேற்றி முடிவில் பட்டம் பெற்றவர். இவர் பட்டம் பெறும் விழா விற்கு சோம சுந்தரக்குருக்கள் தலைமைவகித்தார். யாழ் இந்துக் கல்லூரி இளைப்பாறிய வித்துவான் ஆறுமுகம் முதல் பெரியோர் விழாவில் சிறைப் புரைத்தவர்கள்.

இது இப்படியாக இணுவில் சிவகாமி அம்மன் கோவிலைப் போல் இன்னுமொரு சிவகாமி அம்மன் கோவில் கோண்டாவிலில்உண்டாம்! அது முன்னர் வேள்வி நடக்கும் அம்மன் கோவிலாம். இப்பொழுது வேள்விகள் நிற்பாட்டப் பட்டு அம்மனை சிவகாமி எனப் பேரிட்டு கோவில் கட்டி கொடியேற்றம் செய்ய முற்பட்டார்களாம் அங்குள்ள மக்கள். அம்மக்கள் சிறு பான்மைச் சமூகம் எனக் கருதப்பட்ட படியால் வேறு அங்குள்ள குருக்கள் மார் அதைச் செய்ய விரும்ப வில்லை யாம்.

இதனாலே தங்கள் கோவில் கொடியேற்றம் செய்ய ஓர் ஐயரைத் தேடி பிரதிட்டா இரத்தினத்தை அணுகினராம். பிரதிட்டா இரத்தினம் தனக்கு ஒரு நாளைக்கு நூறு ரூபா தட்சணையும் ஏனைய வரும் படியும் தன்னுடன் விடுவதாக இருந்தால் தான் கொடி ஏற்றித் தருவதாகச் சொல்லியதாம். அதன் படி கொடியேற்றம் நடந்து முடிந்து எல்லா விடயமும் சரி.

ஆனால் யான் அறிந்த அளவில் யாழ்ப்பாணக்குடா நாட்டில் எந்த ஒரு கோவிலில் கொடி யேற்றக் குருக்களுக்கும் நாள் ஒன்றிற்கு 100 ரூபா தட்சணை என கேள்விப்பட்டதில்லை. போக்குவரவுச் செலவுடன் 20 ரூபா முதல் 50 ரூபா வரையும் கொடுக்கப் பட்டுள்ளதை அறிவேன். ஆகையால் முதற்கண் இந்த ஒரு சந்தர்ப் பத்தில் இரு விடயங்கள் சந்தேகமாகின்றன. ஏனைய கோவில் கொடி யேற்றத்தில் ஒரு மாதிரி வாங்கி இந்த குறிப்பிட்ட கோவில் கொடியேற்றத்திற்கு மட்டும் இப்படி வாங்கினால் இது சந்தர்ப்பத்தை ஒட்டிய வியாபாரமோ இல்லையோ? பிரதிட்டா இரத்தினம் என்றால் வேத ஆகம வழி பிரதிட்டையோ அல்லது உருட்டுப் புரட்டில் பிரதிட்டையோ?

அடுத்து தீண்டாமை ஒழிப்பிற்காக அதை நிலை நாட்டுவதற்காகப் போயிருப்பது என்றால் ஏன் றேட் பேசிப் போவான்? தீண்டாமை ஒழிப்பை விரும்புவோர் சிறுபான்மை மக்களைக் கௌரவிப்ப தென்றால் அவர்களிடம் ஏனைய இடத்தில் நடை பெறாத வகை வருத்திப் பொருள் வாங்கி அவர் கட்காக கடமை புரிந்தால் அது ஏமாற்றுதலோ? இல்லையோ?

இவை கட்கெல்லாம் யார் பதில் சொல்வது? பிரதிட்டா இரத்தினம் எனப் பட்டம் சூட்டி தலமை தாங்கி பாராட்டி சிறப்புரைத்த மக்களே இவைகட்கு பதில் சொன்னால் சைவ நன்னெறியில் சில நன்மைகள் காணமுடியும். இல்லா திருந்தால் சைவ சித்தாந்தம் பொய்யரதும் புகழ் விரும்பியினதும் ஏமாற்றுவோரதும் பேதை அரசியல் வாதுயினதும் கையில் இன்று சிக்கிப்பாழாகின்றது என நாம் சொல்வது உண்மை

# கோயில் திருவிழா தடுமாற்றம்

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவிலில் திருவிழாவில் நடந்த நிகழ்ச்சிகளில் அவை அவை அவற்றிற்குரியநெறிகள் கையாளப் படாத படி வேறு வேறு கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டதாம். இந்நிகழ்ச்சிகளில் பழிவாங்கலும் வஞ்சனைகளும் ஆங்காரமும் இடம்பெற்றன நிர்வாகம் பூரணமாக ஆதரித்தது.

சங்கக்கடையில் களவெடுத்தல் மனேச்சரும் பரிசோதகரும் சேர்ந்து களவெடுத்தல் கள்ளத்தில் மாவிற்றல் சீனி விற்றல் முதலியன வில்லுப்பாட்டிலும் பத்திரிகையள் பொய்யான செய்திகள் எழுது கின்றன என்றது பிரசங்கத்திலும் தெரிவிக்கப் பட்டதாம். இக்கோவில் நடை முறைகளை விரும்பாத ஒரு அன்பர் தாம் செய்த கார்த்திகை உற்சவத்தைக் கைவிட்ட வரலாறு குறிப்பிடத் தக்கது. கொடி யேற்ற நிலைகளிலும் இது காறும் நடந்து வந்த முறைகள் மாற்றப் பட்டு வேறு செயல்கள் நடை பெற்றதாம். கொடி யேற்றியவர் அதற்குரிய ஆசாரமுடன் பேணிக் கொள்ள வில்லை என்பதும் ஒரு குறையாகச் சொல்லப் படுகிறது. கோயிலுக்குரியன விற்பனை செய்யப்பட்டதாம் குளத்து நீரை சேற்றுநீராக்கினால் சேற்றில் நீரில் மூழ்கயாரும் விரும்புவாரோ?

# கோவிலில் ஆங்கிலத்தில் கட்டளை

காங்கேசன்துறையில் சட்டத்தரணியாக இருந்த ஒருவர் ஓர் துறவியாகி தமது தொழில் யாவும் நீக்கிக் கொண்டார். இவர் இம்முறை திருக்கேதீச்சரம் உற்சவத்தின் போது அங்கு சென்ற சில பாடசாலை மாணவருடன் உள்வீதியில் பிள்ளையார் சந்நிதியில் நின்று பஜனை சிவ நாம வழிபாடு செய்தாராம். அப்போது திருப்பணிச்சபைச் காரியதரிசி அங்கு சென்று திருமுறைகள் அன்றி வேறு பாடல் சொல்லப் படாது! எனத் தடுத்தாராம். துறவி அதற்கிணங்க தனது வழிபாட்டை நிறுத்திக் கொண்டு இச் செய்தி பற்றி உபதலைவர் ஒருவரிடம் பேசிட: உபதலைவர் காரியதரிசியிடம் நான் சொல்லுகிறேன் எனச் சென்று காரியதரிசியிடம் இதைப் பற்றி கோயிலில் கதைக்கும் பொழுது துறவி கோயிலுக்குள் போனாராம்.

துறவி கோயிலுக்குள் போவதைக் கண்ட காரியதரிசி துறவியை நோக்கி நீர் கோவிலிட்குள் சிவநாமம்சொல்லக் கூடாது. சொன்னால் தடுப்பேன் என ஆங்கிலத்தில் கட்டளையிட்டாராம். காரியதரிசியும் ஓர் சட்டத்தரணி. அஃதிருப்ப கோவிலுக்குள் சிவ என்னும் ஓசை தரும் நாமம் தமிழில் ஓதக் கூடாது என ஆங்கலத்தில் கூறினால் அதன் அர்த்தம் என்ன? ஆங்கிலமொழி பன்னிரு திருமுறையில் ஒன்றோ எனா இச்செய்தியை தெரிவித்து வேறு சில துறவிகள் என்னிடம் பதில் கேட்கின்றனர். நான் என்ன பதில் சொல்ல வேணும் என்பதை திருக்கேதீச்சரத் திருப்பணிச்பை விளக்கினால் நன்று,

# சங்கானைச் சண்டியன் ஐயர்.

சங்கானையில் பலசரக்குக் கடை நடத்தும் சுப்பிரமணிய ஐயரின் இரண்டாவது புதல்வன் ஓர் ஐயர் கிப்பித்தலை சிறிது நெளிந்தநாரி வாய் நிறைய வெற்றிலையுடன் சங்கானைச் சந்தைக்கு அருகில் சயிக்கிலில் வந்தது. என்னைக் கண்டது. உடன் சயிக்கிளை நிறுத்தி பேப்பர் இருக்கோ என்றது. இல்லை என்றேன். பின் போனது. பிறகு எங்கோ போக வந்தது என்னைத் தொடர்ந்து சேமம் விசாரித்தது. பின்மெல்ல மெல்ல தனது கொள்கையை வெளிப்படுத்தி நீ என்ன பிராமணரைக் கண்டிக்கிறாய். என்ன நடக்கும் தெரியுமோ? என்றது. அப்போது நான் சொன்னேன் ஐயா ஆரும் பிழை செய்தால் பிழையைப் பிழை என்று சொல்வார்தானே. நீங்கள் சரியாய் நடப்பது என்றால் நான் காண்பிக்கும் தவறுகளை பிழை இல்லை சரி என உலகிற்கு நீர் விரும்பிய ஓர் பத்திரிகை மூலம் பதில் சொல்லலாமே என்றேன். அப்போது அது உமக்கு என்ன பதில் என்று தான் பிராமணர் பேசாமல் இருக்கிறாங்கள். உமது பின் நாரி முறிச்சு வைப்பது தான் தக்க பதில் என அந்த ஐயர் தூரத்தே நின்று கூறிவிட்டு இனி இந்தப் பக்கம் வந்தால் உமது நாரி பறிபோகும் என்றார்.

தனது நாரி நெளிவு சிறு சொத்தியானதை நிமித்த ஏலாத அது எனது நாரி முறிக்கப்போகுதாம்! எப்படி இருக்கு சங்கானைப் பிராமண சமுதாயத்தின் சண்டித்தனம். இனி இல்லை என்று பொய் சொல்லுமோ?

# கோவில் திருவிழாவில் பேயாட்டம்

சுதுமலை அம்மன் கோவிலில் 12ம் திருவிழாவிற்காக இந்தியாவில் இருந்து விசேட சினிமாப் பாடகர் வரவழைக்கப் பட்டனர். பாடகர் விசா நேரத்திற்கு பெற முடியாததால் அன்று பங்கு கொள்ள வர முடியவில்லையாம்.

இதனால் பின்னர் ஒரு தினத்தில் வருவதாக விசாப் பெற்றதும் வந்தார்களாம். 12ம் திருவிழாக்காறர் (இறைச்சி மிஞ்சினால் தீய்த்து வைப்பது போன்று) தம் 12 ம் திருவிழாவை உரிய தினத்தில் செய்து முடித்தது காணாதென்று சினிமாப் பாடகர் வருகைக்காகமிச்சத் திருவிழாவை வேறுஒருதினத்தில் செய்தனராம்

மிச்சத் திருவிழாத் தினத்தன்று சினிமாப் பாடகரை கோவிலில் கண்டு களித்து கை கூப்பி வணங்கி பாடி ஆடி ஆநந்தமுற ஏராளமான மக்கள் திரண்டு கொண்டனர். பாடகர் தம்பாடல் மேடைமேல்தொடங்க வெளியில்நின்றலோங்ஸ்போட்ட இளைஞர் சிலர் பத்திப் பரவசமாகி பைலாவுடன் ஆடத் தொடங்கினராம். வீச்சு ரொட்டி கடைகள் வீதியில் இருந்தனவும் சினிமாப்பாடக க்கு தாளம் போட்டனவாம், சுதுமலை அம்மன் என் செய்தா ?அவவும் தாளமோ? இது கண்டு எழும்பி ஓடினாவோ? அல்லது கூட ஆடினாவோ? அது தெரியப்பட வில்லை என சிலஅன்பர் செய்தி தெரிவிக்கின்றனர். மூன்றுபாடகரும் ஆளுக்கு ஒவ்வொரு பக்திப்பாடலும் மிகுதி முழுவதும்சினிமாப் பாடலே பாடினர்,

# முப்பத்திமூன்று குண்டமறியேன்.

எனக்கு ஆசாரிய அபிஷேகம் செய்த பொழுது என்குரு எனக்கு நான்கு பொருள் தந்து அதன் உண்மைவழி நின்று பணிபுரியும்படி ஆசீர் வதித்தார். அவை தான் சுருக்கு சுருவம் அகோர சிவாச்சாரியார் பத்ததி (நூல் மந்திரம்) ஒரு கத்தரிக்கோல் தெர்ப்பை நான்காகும். இதன் படி நெறிப்பட்டு ஒழுகிவரஎனைக் கற்பித்தன்றி வேறில்லை. அகோர சிவாச்சாரியர் பத்ததியில் ஒன்பது குண்டத்திற்கு மேல் ஒரு கும்பாபிசேகத்தில் பாவிக்கும் படி கணப்படவில்லை. ஆகையால் என் குருவின்கட்டளையை மீறி நடப்பது குரு நிந்தையாகும். இதனால் 33 குண்டம் போட்டு நடத்தும் உங்கள் கோவில் கும்பாபிஷேகத்தில் நான் வந்து கலந்து கொள்ள முடியாதிருக்கிறேன்.

என்று இவ்வாறு புங்குடுதீவில் நடை பெறவிருக்கும் கண்ணகை அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தில் தான் கலந்து கொள்ள முடியாது என ஒரு குருக்கள் கும்பாபிஷேகத்தை அதி விமரிசையுடன் 33 குண்டம் போட்டு மிகப் பெரிதாகச் செய்ய எத்தனிக்கும் பிரபலவியாபாரிகளிடம் தெரிவித்தாராம், அதில் ஓர் தனவந்தர் அதிசயித்து ஐயா அப்படி உள்ள காரியமோ என அதிசயப் பட்டுக் கேட்டராம் என நமக்கு செய்திகள் எட்டியுள்ளன.

நாமும் தான் சொல்கின்றோம். ஓர் கருமத்தைச் செய்வாரிலும் கருமத்தைச் செய்விப்பார் எவற்றையும் நன்கு விளங்கி அதன் பின் துணிதல் தான் நன்று. பெரும்பாலும் எமது யாழ்ப்பாணத்தில் குண்டம் வேதிகை யாக அமைப்பு அக்கினி வகை ஓமம்திரவியம்இவை எப்படி இருக்க வேண்டும். அவை அவை அந்த அந்த வகையில் செய்யப்படும் பொழுது என்ன என்ன பலனைத்தரும் என்றஇந்தவிளக்கங்கள் மிக மிகக் குறைவு. இதற்கு யார் பொறுப்பு? வழிாட்டிக பிழைத்தால் எல்லாம் பிழையே?

கத்தரிக் கோல் ஒன்றை குருக்களாகப் போவார் தனது ஆசாரிய அபிஷேகத்தன்று தமது குருவிட மிருந்து ஏன் பெறுவான் என்பதை சிறிது விளங்கினால் மிகுதி எல்லாம் தானாக விளங்கும். கத்தரிககோல் கொடுப்பதின் அர்த்தம் என்ன தலைமயிர்வெட்டிப் பழக்கவோ? என்பதை 33 குண்டம் போட எத்தனிக்கும் பிராமண சமுதாயம் உலகிற்கு வெளிப்படுத்தி விட்டு பிறகு 33 அல்ல 100 குண்டமாதல்போடட்டுக்கும்.

# விசேட அர்ச்சனையின் அன்று விபரீதப் பலன்.

நவாலி அந்திரான் முருக மூர்த்தி கோவிலில் உற்சவ காலத்தில் 5ம் திருவிழா ஒன்றில் முன் பிலாத வகை விசேடமாக ஆறுமுக சுவாமியை எழுந்தருளச் செய்து நடுமண்டபத்தில் கொண்டு வந்து வைத்து மின் பல்ப்புகளால் சோடித்து யாரோ தனக்கு வேண்டிய பிற ஊர் பிரமுகர் ஒருவரைக் கௌரவிக்கும் முகமாக அந்தக் கோவில் ஐயர்மார் விசேட அர்ச்சனை செய்தார்களாம். ஒலி பெருக்கியில் மிகு சிறப்புக்களுடன் ஆரவாரமாக அர்ச்சனை நடைபெற்றதா.

அத்திருவிழா உபயம் அவ்வூரில் உள்ள ஓர் குடும்பத்தைச் சேர்ந்ததாம் அதுகளுக்கும் அர்ச்சனைக்கும் தொடர்பு இல்லை. ஆனால் அத்தினத்து அக்குடும்பத்தில் இருவர் கடலில் தோணியில் சென்றவர், தோணி கவிழ்ந்து கடலில் மூழ்கி மாண்டனராம். ஒலிபெருக்கில் மந்திரம் உரக்கத்தியும் உபயகாரரை காபாற்ற முடியவில்லையே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யன் நான் என போதிப்பார் சொற் கேட்டு எனைக் கைவிடாதே!

## கொல்லாமை போதித்து அன்பு நெறியும் அருள் நெறியும் பெருக்கவந்த தாயுமானவரும் யோகசுவாமிகளும் வந்திலரேல் நமது சைவநெறியின் புனிதம் மாண்பு நமக்கு எட்டியிராது.

இப்படியாக தாயுமான சுவாமிகள் சிவனிடம் கேட்கின்றார். கீழேதரப் படும் தாயுமான சுவாமிகளின் பாடல் ஒன்றில் இக்கருத்து இருக்கிறது. ஏன் இப்படியாக தாயுமானவர் சிவனைக்கேட்கிறார். கேட்கவேண்டிய காரண மென்ன? என பலரும் நாம் சிந்திக்க வேண்டி உளது. பெரியோரைவசை சொல்வது இயல்பு. அதுவும் எவன் ஒருவன் உண்மையைச் சொல்லு கிறானே அவனிற்கு இடைஞ்சல்கூட. இது அநுபவம். சந்தர்ப்பத்திற் கேற்ற வாறு பேசித்திரிவார்க்கு சங்கடம் குறைவு: அடுத்து வாழ்வில் உண்மையை எவரும் விரும்பார் ஏற்கார் இது உலகியல் நிலை.

இதனாலே தாயுமானவரும் உண்மையை உணர்ந்து உண்மையைச் சொல்லத் தொடங்க பொய்யைப் பேசி பல திருகுதாளம் செய்த ஏனைய சமயத்துறைப் பெரியார்க்கு இவர் சொல் இடைஞ்சலாக வந்துவிட்டது. அதனாலே தம்மை மதித்த மக்கள் கூட்டத்து தாம் பொய்யராகப் போகி றோம் என்ற பயத்தால் வேறுவகையின்றி தாயுமானவன் சொல்வது பொய் அவன் சொல்லைக் கேளாதையுங்கள் எனச் சொல்லிடவேண்டி வந்தது. இச் செய்திகள் தாயுமானசுவாமிகள் காதிற்கும் எட்டிஇருக்கும். அதனாலே தாம் உண்மை சொல்ல அதனை மதியாத பொய்யர் தம்மைப் பொய்யன் எனச் சொல்லிட உளம் வருந்தி ஊரார் பொய்யன் என்றாலும் சிவனே நீயும் பொய்யன் என என்னை எண்ணிகைவிடாதே என்கின்றார்.

நமது நிலையிலும் பொய்யன் இவன் என்று நம்மையும் பலர் போதிக் கிறார். நாம் என்செய்யலாம் இதை எனையாண்ட குருமணி ஆறுமுகப் பரம் பொருளிடம் சொல்வேன் ஐயா நீ வேதநெறி தழைக்க பரஞ்சுடராய சிவத்தின் நெற்றிக் கண்ணில் உதித்தனை. வேதமும் கடந்து நின்றனை அசுரரை குலத்தோடு அழித்தனை. நமது வேத நெறியைப் பாழாக்கி தம் புகழ் பெருக்கி பொருள் பெருக்கும் அசுரரான அம்மன்கள் சுவாமிகள் குடிகாரப் பிராமணர் தீவுப்பகுதிப்பிராமணர்க்கு பதிலை ஏற்றவாறு நீயே சொல்லிடுவாய் எனவேண்டுவேனே அன்றி வேறு செயல் இல்லை. முன்னர் தீபத்தில் தரப்பட்ட தாயுமானசுவாமிகளின் பாடலின் தொடர்ச்சியை இதன் கீழாகக் காண்கிறீர்கள். அவர்தன்னை எவ்வாறு மதித்திடுகின்றார்? சைவ நெறியில் அதற்குரிய தூயஒழுக்கமிலாத வழி அது சரிவருமோ? இதனை வாசித்தறிந்து சிந்தித்துப்பாருங்கள். தாயுமானசுவாமிகளும் யோகசுவாமி யும் வந்தருளியது சைவஉலகம் செய்த தவப்பேறாகும் என்பதை உணருங் கள். யாழ்ப்பாணத்து சைவ சீலங்களை நாம் உறுதியுடன் பயில உணர்வு தந்து உய்யக் கொண்டவர் யோகசுவாமிகள். தருமத்தின் அடைப்படை யில் சத்தியம் தவறாது வாழுங்கள் என்பதே இப்பெருமக்கள் கருத்தாவது:

### பராபரக்கன்னி

வஞ்சனையும் பொய்யும்உள்ளே வைத்துஅழக்காறாய்உளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ நெறிதான் பராபரமே.

வஞ்சனையும் பொய்யும் உள்ளத்து வைத்து ஒருவர் பெருமை கண் டால் பொறாமையால் உளறிப் பேசிடுகின்ற நெஞ்சுடைய எனக்கும் நெறி உண்டோ கடவுளே இதென்ன எனக் கேட்கிறார். சமயம் பேசும் மடாதிபதிகள் பிராமணர் யாரும் இதைச் சிந்திப்பாரோ? வித்துவான் களே இதைக் கொஞ்சம் கொத்தி அலசிப் பாருங்களேன். 40

பாசம்போய் நின்றவர்போற் பாராட்டி யானாலும்
மோசப்போ னேன்நான் முறையோ பராபரமே.

பாசம் போய் நின்ற பரம சாதுக்கள் போல நானும் ஓர் சாது என என்னைப் பாராட்டி நான் மோசம் போனேன். நான் உன் அரு ள் பெற ஆசைப் படும் எனக்கு முறையோ எனக் கேட்கின்றார். பட்டம் கொடுக்கும் பேதைச் சைவத் தமிழரே இது என்ன சொல் வீரோ? 41

நன்றறியேன் தீதறியேன் நானென்று நின்றவனார்
என்றறியேன் நான்ஏழை என்னே பராபரமே.

நன்மை அறியேன் தீமை அறியேன் நான் என்று சொல்லி நின்ற வன் ஆர் என்று அறியேன் ஐயோ நான் ஒரு ஏழை எனக்கு இரங் காயோ என்கின்றார். 42

இன்று புதிதன்றே எளியேன் படுந்துயரம்
ஒன்றும் அறியாயோ உரையாய் பாரபரமே.

நான்படும் துயரம் இன்று புதிதல்ல, எத்தனை எத்தனை உண்மை விரும்பும் சாதுக்கள் என் போல் அல்லல் பட்டிருப்பார். இது எல்லாம் நீ அறிவாய், இப்பிறவியில் அன்றி எல்லாப் பிறவியிலும் பட்ட துயரம் நீ அறியாதவனோ? சொல்வாய் என்கின்றார். 43

எத்தனைதான் சன்மமெடுத் தெத்தனைநான் பட்டதுயர்
அத்தனையும் நீயறிந்த தன்றோ பராபரமே.

எத்தனை பிறவி எடுத்து எடுத்து அநுபவித்த துயர் எத்தனை எவ் வளவு இவ்வளவும் உனக்கன்றி யார்க்குத் தெரியும்? நீ அறிந்ததல்லவோ என்கின்றார். 44

இந்தநாட் சற்றும் இரங்கிலையேற் காலன்வரும்
அந்தநாட் காக்வல்லார் ஆர்காண் பராபரமே.

நான் வேண்டிப் பணியும் இந்த நாள் நீ இரங்கிடாதிருந்தால்: இயமன் வரும் அன்று சாகும் அன்று ஆர் துணை என நம்பிடுவேன் அந்தநம்பிக்கை சந்தேகமே என்கின்றார். 45

உற்றுற்று நாடி உளம்மருண்ட பாவியைநீ
சற்றிரங்கி ஆளத் தகாதோ பராபரமே.

உன் அருளையே பெற வழி நாடி அதுவோ இதுவோ என்று உளம் மருண்டு நிற்கும் பாவியை நீ சற்றேனும் இரங்கி என்னையும் ஒருவனுக்கி ஆண்டிட திருவுளம் இசையாயோ? அது தகாத செயல் என நினைப்பா யோ? எனக் கேட்கின்றார். 46

எள்ளளவும் நின்னைவிட இல்லா எனைமயக்கில்
தள்ளுதலால் என்னபலன் சாற்றாய் பராபரமே.

எள்ளளவு தானும் உன்னைவிட்டு நான் இல்லை. உன்னால் பார்ப்பேன் கேட்பேன் சுவைப்பேன் மணப்பேன் இன்புறுவேன் துன்புறுவேன் இவை எல்லாம் நீ அல்லாமல் இல்லை என எண்ணும் என்னை மீண்டும் மயக் கில் தள்ளுவது எதற்கு! கடவுளே இது தகாது என்கின்றார். 47

பாடிப் படித்துலகிற் பாராட்டி நிற்பதற்கோ
தேடி யெனையடிமை சேர்த்தாய் பாரபரமே.

பாடி படித்து பேசிட மற்றவர் பாராட்டி இவர் ஓர் பெரியவர் சுவாமி என காணிக்கை தர கையுறை தர அதற்காகவோ என்னை நீ தேடி ஆண்டது! உன்னைக் காட்டாது என்னைப் பெருமைப்படவை த்து என் பிரயோசனம் எனக் கேட்கிறார் தென் இந்தியர் ஒரு புறமா னாலும் யாழ்ப்பாணப் பேதையரே நீ விராதல் இதைத்தெளிவீரோ?48

சொன்னதைச் சொல்வதல்லாற் சொல்லறவென் சொல்லிறுதிக்
கென்னத்தைச் சொல்வேன் எளியேன் பராபரமே.

முன்னோர் சொன்னதை நான் படித்து சொல்லுதல் அல்லாது என் சொல் எல்லாம் அற்றிட வரும் சொல்லும் பொருளும் அற்ற சுகமுடி வினைப் பற்றி என்னத்தை என்னால் சொல்ல முடியும். நான் ஓர் எளி யன் அவ்வாறான நான் எவ்வகையில் உண்மைநிலை சொல்லமுடியும்49

சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலுமெனக் காசை பாரபரமே.

சொல்லும் பொருளும் இருமையும் நீங்கி சும்மா இருக்கும் சுகங் கிடைத்து இருப்பதற்காகவே இரவும் பகலுமாக இச்சைப்படுவேன் பெரு மானே இது அறியாயோ? என்கின்றார் 50

நேச நிருவிகற்ப நிட்டையல்லால் உன்னடிமைக்
காசையுண்டோ நீயறியா தன்றே பராபரமே.

உன்னிடத்து அன்பாகி ஏதும் தடுமாற்றமிலாது உறிதியுடன் இருக்கும் நிட்டை நிலை அல்லாது வேறு உன் அடிமைக்கு ஆசைஉண்டோ? உள்ளத்து இருந்து எல்லாம் அறியும் சிவனே உனக்கு இது தெரியாதோ? 51

துச்சனென வேண்டாம்இத் தொல்லுலகில் அல்லல்கண்டால்
அச்சம் மிகஉடையேன் ஐயா பராபரமே.

என்னை இவன் ஓர் பயந்தவன் உறுதியிலாதவன் (துச்சன்) எனநீ சொல் லாதே! ஏனெனில் பழமையான இந்த உலகில் அல்லல் நிகழக் கண்டால் நான் பெரும் அச்சமுடையேன்! என் ஐயா குரு மணியே எனைக் கைவிடாதே எனக்கேட்கின்றார்! 52

கண்ணுவா ரேனும்உனைக் கைகுவியா ராயின் அந்த
மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே.

கண் உடையவராய் பெரும்புகழுடைய திறலுடைய மக்களாக இருப் பாரேனும் உன்னை கைகுவித்து கும்பிடாத மக்களாக அவர் இருப்பாரேயா யின் அவர் மண்ணுவார் அவர் நட்பை நான் மதியேன் பராபரமே! 53

கொல்லா விரதங் குவலயமெல் லாம்ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.

கொல்லாமை என்பதைக் கடைப்பிடித்து வாழ்வதே மேலான விரதம் என்பதை உலகம் எல்லாம் உணர்ந்து ஓங்கிவாழ எல்லார்க்கும் சொல்வது எனது ஆசை என்கின்றார். விரதம் என்பது குறித்த நாளில் சீலமுடன் வாழ்தல். புலால் உண்பாரும் விரததினத்தன்று அதனைச் செய்யார். ஆனால் விரததினத்தன்று புலால் உண்பதை தவிர்தல் மட்டுமன்றி எல்லா நாளும் இதைச் செய்யும் படியும் அச்செயல் எங்கும் ஓங்கும் படியும் சொல்வது என் இச்சையானது என்கின்றார். 54

எத்தாற் பிழைப்பேனோ எந்தையே நின்னருட்கே
பித்தானேன் மெத்தவுநான் பேதை பராபரமே.

என்ன வகையாக நான் பிழைப்பேன். இவ்வுலகில் எனக்கு என்வேண் டும்: போக இன்பங்கட்கே பித்தம் கொண்டோடித் திரியும் உலகில் அவர் பித்துப்போல் அல்லாது எந்தை பெருமானே உன் அருளுக்கே நான் பித் தாகிக் கொண்டேன். மெத்தவும் நான் அதற்கே பித்தானேன். பேதை அதை என்றோ பெறுவது எனக்கேட்கின்றார். 55

வாயினாற் பேசா மவுனத்தை வைத்திருந்துந்
தாயிலார் போல்நான் தளர்ந்தேன் பராபரமே.

வாயினால் பேசமுடியாத பேறுடைய மவுனத்தை என்பால் வைத்திருந் தும் தாய் இல்லாத குழந்தைபோல் தளர்ந்தேன் பராபரமே: இது தகு மோ என்கின்றார். மௌனத்தின் உயர்வு பேசப்பட்டது 56

அன்னையிலாச் சேய்போல் அலக்ணுற்றேன் கண்ணார
என்னத்தில் தாய்போல் இருக்கும் பராபரமே.

தாயில்லாக் குழந்தை போல் துன்பப்பட்டேன். என் கண் ஆரக்காணும் படி என் உள்ளத்தில் தாய்போல் இருக்கின்றாய். அதை உணராது அலக் கட்பட்டது என் தவறு: 57

உற்றுநினைக் கில்துயரம் உள்ளுள்ளே செந்தீயாய்ப்
பற்றநொந்தேன் என்னைமுகம் பார்நீ பராபரமே.

என்கேவலச் செயலை நினைத்தால்அத்தகைய செயலையும்நான் செய்ய வோ என்ற துயரம்என்உள்ளத்துள்ளே செந்தீயாகிபற்றிச்சுட நான் நொ ந்தேன் பராபரமே. 58

பொய்யன்இவன் என்றுமெள்ளப் போதிப்பார் சொற்கேட்டு
கைவிடவும் வேண்டாமென் கண்ணே பராபரமே.

நான் ஓர் பொய்யன் கெட்டவன் என்று மெள்ள மேடைமேல் நின்று போதிக்கிறார்! அவர் சொல்லைக் கேட்டு இவன் அப்பொழுதுகூடாது என்று நீ கைவிடாதே என் கண்ணே பராபரமே என்கின்றார். 59

எண்ண மறிந்தே இளைப்பறிந்தே ஏழைஉய்யும்
வண்ணந் திருக்கருணை வையாய் பராபரமே.

எனது எண்ணத்தை அறிந்து எனது களைப்பை சலிப்பை நீ அறிந்து உன் அருள் வண்ணம் நிறைந்த திருக்கருணையை வையாயோ பராபரமே எனக்கேட்கின்றார்: 60

(இதை எனது நிலையிலும் சிந்தியுங்கள் தெல்லிப்பழை சிவத்தமிழ் தம்பிரான் (குடிகாரப் பிராமணர் பலரும் பலபிழையும் செய்து விட்டு என்னையும் இன்று இப்படியே சொல்கின்றார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடே ஐயர் நிற்பாட்டு குடியை என்றிருந்தால் திருந்தி இருக்கக்கூடும்.

இப்படிச் சொன்னார் ஓர் இளைப்பாறிய வித்தியாலய அதிபர். ஒருநாள் ஓர் மத்தியானவேளை நமது பத்திரிகையை பெறும் ஓர் வித்தியாலய அதிபரைக் காண நேர்ந்தது. அவர் கோண்டாவிலைச் சேர்ந்தவர். பல காலம் கூட்டுறவுத்துறையில் தலைவராக இருந்து பணிஆற்றியவர். அவர் என்னைக் கண்டார். கண்டதும் எம் பத்திரிகை உங்களுக்கு கிடைப்பதோ எனக்கேட்டேன். அப்பொழுது அவர் கிடைத்தது வாசித்தேன் எனக்கூறிவிட்டு பெரும்பாலும் உங்கள் பத்திரிகையை சில அந்தணர் தவறாகக் கருதுகின்றனர். நீங்கள் அவர்களைக் கூடுதலாகக் கண்டிக்கிறியள். இது சரியல்ல என ஒரு அந்தணர் என்னிடம் கூறினார் என்றதும் என்ன சந்தர்ப்பம் வடிவாகச் சொல்லுங்கள் என்றேன்.

அப்பொழுது அவர் சொன்னார் எமது இந்துசமய விருத்திச் சங்கத்தில் ஓர் கூட்டத்தில் உங்கள் கருத்துக்கள் போன்றுள்ளவாறு அந்தணர் செய்யும் தவறுகளையும் கோவில் உள்ளதவறுகளையும் எடுத்துக்காட்டி சில தீர்மானங்கள் நடந்தன. அக்கூட்ட முடிவில் நான் ஓர் அந்தணரைக் கரணநேர்ந்தது. அப்பொழுது அவரிடம் ஐயா! நீங்கள் விடும் தவறுகளை உலகம் அவதானிக்கின்றது என்றேன். ஐயர் உடன் என்னை நோக்கி சந்திரதீரபத்தைக் குறிப்பிடுகின்றியளோ? அவர் கண்டபாட்டில் எழுதுறார். அவர்கருத்தைக் கேட்டு ஆர் திருந்துவார் என்றார். அவர் ஒரு மதிப்பாகச் சொன்னால் சிலர் திருந்தலாம் எனக்கருத்துத் தெரிவித்தார் என அந்தவித்தியாலய அதிபர் என்னிடம் கூறுதலும்.

நான் அவரை நோக்கி ஐயா இன்று பல பிராமணர் தமது மதிப்பை இழந்து மது வுண்டு பொய் பேசி கோவிலில் செய்யத் தகாத அத்தனை பழிகளையும் செய்கிறார். கோவிலில் நடத்திட வேண்டிய ஒழுக்க முறை அத்தனையும் கை விட்டார். காவாலித்தனமான சண்டித்தனமான முறையில் நடந்து கொள்ளுகின்றார். இப்படியான இவர்களை இவர் தவற்றை நீங்கும்படி சொல்வதென்றால் ஐயா இதைச் செய்யாதே என்று சொன்னால் கேட்கவோ போறார்? ஓம் ஓம் பிழை தான் நான் சரியாய் நடக்கிறேன் என்று சொல்லி விட்டு அங்கால் போய் அவன் பேயனை விட்டு என்று தன் செயல்களை இன்னமும் கூடச் செய்கிறார். ஐயோ இது உண்மையில் நடக்கின்றது. இன்று ஐ.ஆர்,சி போன்ற வகையில் கொடியேற்றுகின்ற குருக்கள்மார் நடக்கிறார். சில இடங்களில் இவர்களைப் போய்ப் பார்த்தால் அல்லவோ தெரியும். இவர்கள் கொடியேற்றும் போதும் அதற்குரிய எட்டுணை ஒழுக்கமும் இல்லை. வீடு சென்று மனைவியுடன் படுத்துறங்கிறான். முகச் சவரம் செய்கிறான். இரகசியமாக மதுவும் நடக்குது. இவர்களை ஐயன்மீர் செய்யாதையுங்கோ என்றால் ஒரு சிமிட்டு சிரிப்பு இரண்டோடும் விஷயம் சரி.

இப்படியான ஒரு ஐயரை கூட்டுறவுத்துறையில் பெரும்பொருள் சம்பாதித்த ஓர் பரிசோதகர் தற்போது ஊருக்கு ஒரு முருகபக்தராக மாறி ஐயர் செயல் சரி என்று ஆமா போடுகிறாராம். இவர் சவுக்காரத்தின் கணக்காளரும் ஆவார்.

இதனாலே இந்தப் பழக்கம் பெருகிப் பெருகி இதுவே இப்பொழுது பழக்கமாக அவருடைய தர்மமாக வந்திட்டது. அப்பொழுது இதனாலே திருத்தமாக நடக்கும் பிராமணரும் திருத்தமில்லாது நடக்கும் பிராமணரும் இரண்டுபேரும் குருக்கள் என தமக்குரிய கௌரவத்துடனே இருக்கிறார். இதனாலே திருத்தமாக நடப்பவரும் இனித் தவறவே போகின்றார் ஏனெனில் கெட்டடத்தையுடையவனும் குதிரைக்கு சோடினை போட்டதுபோல் கொடுக்கிழுத்துக் கட்டிக் கொண்டு கொடியேற்றி பெரும் பிழையாக நடந்திட நல்லவரும் நாமும் தவறினால் என்ன என நினைப்பார். அது இயல்பு. இருவருக்கும் ஒரே மரியாதை என்றால் நினைப்பர் தானே! ஆதலினால் திருத்த மற்றாரை கடிந்து சொல்ல வேண்டி வருகின்றதே யன்றி வேறு எவ்வகையாலும் சொல்ல முடியாது. இதனாலே திருத்தமுடன் நடப்பார் தம்மை இன்னமும் உயரவைப்பர். அடுத்து திருந்தாத குடிகாறப் பிராமணக் கூட்டம் தம் பிழையை உணர்ந்து திருந்த முடியும். வேறு வகையால் இவர் திருந்தார். திருந்தாட்டிலும் எமக்கு அக்கறையில்லை. ஏன் என்றால் நல்லவரும் இனிக் கெடாதபடி நாம் நமது கடமையைச் செய்துள்ளோம். ஆர் எப்படி நினைத்தாலும் எனது நிலை இது தான் நான் எமது கோவிலில் நெறிகளை பாழாக்கி வேத நெறிக்குரிய செயலை விடுத்து வேறு தொழில் புரிந்து நமது தமிழினத்தை ஏமாற்றிப் பிழைக்கும் பிராமண சமுதாயத்தை கடிய வார்த்தைகளாலே கண்டிப்பேன். இதை நீளப் பரவவிடக் கூடாது- பிராமணர் தத்தமக்குரிய வேத நெறிகளை தாமும் கடைப் பிடிக்கட்டும் இல்லாதிருந்தால் நான் இக் குலத்தவன் அல்ல எனப் பிரகடனப் படுத்தி விட்டு வாழட்டும். எனக்கு அது பற்றி அக்கறை யில்லை. இவன் பூநூலையும் போட்டுக் கொண்டு திருகுதாளம் செய்ய இனி விட முடியாது. குற்றம் புரியும் பிராமணனுக்கு சந்திர திபத்தில் பொல்லாத கோபம் என்பதை எனக்கு நல்லாய் விளங்கும். ஆனால் அதே நேரத்தில் வேத நெறி நிற்கும் உத்தமர் அத்தனை பேரும் நம்மை ஆதரிக்கின்றனர். தமது வறுமையிலும் செம்மையாக வாழும் அந்தணர் நமது பணியைப் போற்றி பண உதவியும் செய்கின்றனர் ஆனால் ஒழுக்க மிலாத பிராமணன்தான் திருந்தாமல் நான் கூடக் கண்டிக் கிறேன் எனச்சொல்வதை நான் ஏற்கத்தயாரய் இல்லை. எனக்கூறியதும்

அதிபர் குறுக்கிட்டு ஆம் அது எனக்கும் விளங்குது. மேற்சொல்லிய நிலையில் உள்ள ஒரு ஐயர் தான் எனக்கு இந்தக் கருத்தைச் சொன்னவர் எனக் கூறிவிட்டு; நானும் இதை இப்ப நன்கு உணர்கிறேன். ஏனெனில் சில வருடங்களுக்கு முன்பு எங்களுடைய கோவிலில் பூசைசெய்யும் ஓர் ஐயர் மது உண்பவர். அது பலருக்கும் தெரியும், தெரிந்தாலும் நான் ஐயருக்கு அவர் தவறு விளங்கக் கூடியதாக பட்டும் படாமலும் சொல்லிப் பார்த்தேன். ஐயர் திருந்தியபாடில்லை. நானும் உவரைத் திருத்த முடியாது என பின்னர் பேசாது விட்டுட்டேன். ஆனால் அவருக் பின்னர் ஒரு பொல்லாத வருத்தம் வந்தது. அந்தவருத்தம் வந்ததும் அந்தவருத்தம் மாறவேண்டு மென்றால் நீர் குடியை விடவேண்டுமென்று டாக்டர்மார் கூறியபின்தான் ஐயர் குடியை துப்பரவாக விட்டவர். இப்பநான் நினைக்கிறன் அப்பொழுது ஏடேய் பிராமணி நிற்பாட்டு குடியை என்று உறுக்கி சொல்லி இருந்தால் ஐயர் சில வேளை நிறபாட்டி இருக்கவும் கூடும் திருந்தி இருக்வும் கூடும் என தன் அநுபவத்தை தெளிவாகக் கூறி விட்டு சரி சரி நல்ல வெய்யிலில் வெறும் தலையோடு நிற்கிறியள். பிறகு சந்திப்போம் எனக்கூறி விடைபெற்றுச் சென்றார். நானும் நமதுவழியில் திரும்பினேன்.

## தீபத்திற்கு அன்பரின் கருத்து.

ஆசிரியர், சந்திரதீபம்

திங்களின் பத்திரிகை கண்டு என் சிந்தையில் இதுகாறும் ஆப்பாக வேரூன்றியிருந்த கார்ள் மார்க்ஸ் லெனின் சித்தாந்தங்கள் அடி நுனியோடு கிள்ளிக் கிளறப்பட்டு நாயன்மார் காட்டிய தன்னை மறந்த தனித்த எளிமை வாழ்வே அப்பழுக்கற்ற உன்னத சீவியமே உயர் குடி வாழ்வே ஆத்மார்த்த வாழ்வு என்று அறிய உணர முடிந்தது.

சைவம் செப்பும் தய்வத்தன்மை திரட்சியாக நிறையப் பெற்ற செம்மையான வழி சைவ வழி.

மேன்மை கொள் சைவ நீதி ஏன் உலகெல்லாம் அலைபாயக் கூடாது?

உங்கள் பத்திரிகையில் கண்டது போல வசனத்துக்கு வசனமல்ல வார்த்தைக்கு வார்த்தையல்ல அட்சரத்துக்கு அட்சரம் பிராமணகுலம் மேலான தியாக குலம். தூற்று தற்குரிய வரல்லர் மாறாகப் போற்றிப் பூஜித்து வணங்கு தற்குரிய ஆச்சார சீலர்கள் குணக்குன்றுகள் அந்தணர்கள்.

ஆதலால் கறள் கட்டி இருக்கும் சைவநெறியை (வெளி)இதர மிலேச்ச நாகரிக புன்மை இருட்டில் சிக்கித் தறி கெட்டு நடக்கும் (அ) சைவமக்களை கரை சேர்க்கும் நும் பணி சிறக்கட்டும். கர்ம வினைப்பயன் என்னும் தத்துவ மறியாக் கார்ள் மார்க்ஸ் (சிற்றறிவு) சித்தாந்தங்களில் மூழ்கி இருந்த (என்னையும் என் போன்றோரையும்) புன்மைச் சமணத்தில் புக்கு நிலைகுலைந்து வேதனைப்பட்டு அங்கலாய்த்த தம்பியான மருணீக்கியாரை திலகவதி அம்மையார் கை தூக்கி கரை சேர்த்து பேரின்பம் காட்டியது போல தாங்கள் எம்மை (நன்மைப் பயன் வினையால்) முற்பிறப்பில் செய்த நல்வினை—புண்ணியப்பலனால் இன்று முதலாளியாய்யிருப்போரைப் பார்த்துப் பொறாமைப் படத்தூண்டும் உன்மத்த கொம்யூனிச சித்தாந்தத்திலிருந்து என்றென்றும் மேலுள்ளவனை வைத்து வக்கரித்து (தன்கடன் பொறுப்பை அறியாது உணராது) முதலாளியை வாழவிடாது உயிரைக் கொல்லும் விடமாகவிஷ வித்தாக இருக்கும் மார்ட்ஸ் லெனின் சித்தாந்தங்களிருந்துஎம்மைக்காத்து மீட்கும் பணியைச்(மருணீக்கியார் பணியை நீவிர் இன்றையமிலேச்ச உலகில் கலியுகால உலகில் செய்து வருகிறீர்கள்.

நும்பணி சிறக்குக. செழும் சைவம் விழுமி ஓங்குக.

இப்படிக்கு
சின்னமணி [illegible]

## நல்லூர் சிவன் கோவிலில் கலியாணம் ஞானசம்பந்தர் மடத்தில் இடியாப்பம்.

கொழும்புதுறையைச் சேர்ந்த ஒருவரது திருமணம் நல்லூர் சிவன் கோவிலில் நடை பெற்றதாம். இப்பொழுது கலியாணத்திற்கு காசு கூடவாம். முன்பு 250 இப்ப 300 ரூபாய் எனத் கேள்வி. அத்துடன் நல்லூர் சிவன் கோவிலில் நடை பெற்ற திருமணம் காண வந்த உறவினர் நண்பர்க் கெல்லாம் மணமகன் வீட்டிலோ அல்லது மணமகள் வீட்டிலோ விருந்து நடை பெறாது நல்லூர் சிவன் கோவிலிற்கு அருகாமையில் உள்ள ஞானசம்பந்தர் மடத்தில் நடந்தாம். திருமணம் பகல் இலாது இரவு வேளையாய் இருந்ததால் இடியப்பம் மடத்தில் விருந்தினர்க்கு பரிமாறப் பட்ட தாம். மடாதிபதியின் உத்தரவுப்படி நடந்த மண மக்கள் பலகார விருந்திற்கு மடாதிபதி தலைமை தாங்கினரோ எனக் கேட்ட பொழுது அப்படியாகத் தான் கேள்விப் படவில்லை என இச் செய்தியைத் தெரிவித்தவர் சொன்னார்.

ஆகத் தனக்கு மாப்பிளையின் தாயார் ஐயற்றை கோவிலில் கலியாணமும் மணி ஐயற்றை மடத்தில் வாறவைக் குசாப்பாடும் ஒழுங்கு செய்திருந்தோம் மடத்தில் இடியப்பம் அவித்து தாறதற்கு அவை கேட்ட காசை அப்படியே கொடுத்திட்டம் பகல் எண்டால் இரத்தின ஐயர் பிறிம்பா காசு தந்தா சோறு தாறண்டவராம் இது இரவில் நடந்தபடியால் மணிஐயர்மடத்தில் இடியப்பம் ஒழுங்கு செய்யப்பட்டதுஎனக் கூறினார் எனறு இச் செய்தியைத் தெரிவித்தவர் எம்மிடம் கூறினார்.

## சென்ற இதழ் கடிதத்து குறிப்பு

மாவிட்டபுரம் கருத்தரங்கு பற்றி சமூகம் கொடுத்த இன்னுமொரு அன்பரிடம் விசாரித்தேன். அவர் கடிதத்தில் குறிப்பிட்டவாறு அங்கு பேசப்பட்டது எனக் கூறினார். அவரும் அரசாங்க சேவையில் நின்றும் இளைப்பாறிய உத்தமர். ஆதலின் பிராமண சமூகம் தாங்கள் சமய வியாபாரிகள் என்பதை கருத்தரங்குகளில் வெளிப்படையாகக் காண்பிக்கின்றார் என்பது தெளிவாகிறது. ஸ்நபன அபிஷேகத்தை காசுக்குத்தக்க மாதிரிச் செய்வது என்பது வெறும் பேதைப் பேச்சாகும். இது இந்திர ஜாலவித்தையிலும் மிஞ்சிய ஏமாற்று.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் கந்தபுராண பெரிய [illegible] ஆசிரியர் வை. நல்லையா அவர்களால் இலங்கை மணி சைவ [illegible]த்தில் பதிப்பிக்கப் பெற்று வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org